போன் நெ: 15. விலை 2 அணா REGD. NO. 4643

திராவிடநாடு

மலர் 12 | 16—5—54 | இதழ் 46

நூறு வருஷம் ஆனாலும்!

நூறுவருஷம் ஆனாலும், அந்தக் காரியத்தை நிறைவேற்ற முடியாதாம்! பட்டாபிராமன் என்னும் காங்கிரஸ் அன்பர், வெளியிட்டிருக்கிறார்!!

நூறு வருஷம் ஆனாலும்!—தெளிவாக, உறுதியோடு, 'ஒருக்காலும் முடியாது' என்கிற எண்ணத்தோடு இதனைத் தெரிவித்திருக்கிறார், பார்லிமெண்டில்.

"பத்து வருஷமல்ல! நூறு வருஷம் ஆனாலும் இந்தியைத் தேசிய மொழியாக்க முடியாது" என்றாராம்! அவர் தேசிய நண்பர்! திகைப்புத் தென்பட்டதாம், சபையில்!! ஏற்படாமலா இருக்கும், அதுவும் ஒரு காங்கிரஸ்காரர் — இந்திக்காக வக்காலத்து வாங்கிப்பேசியவர், இதுபோது இப்படிக் கூறினால், நூறு வருஷம் ஆனாலும் முடியாது! என்று கூறியதோடுமட்டுமல்ல, அதற்கான காரணத்தையும் வெளியிட்டிருக்கிறார். "என்ன இருக்கிறது, இந்தியில்? சரியான வார்த்தைகள்கூட இல்லாத அதனை எப்படிப் பொதுமொழியாக்க முடியும்!"

கேட்பவர், பட்டாபிராமன்! திருச்செங்கோட்டுத் தேசிய நண்பர்!! கேட்கிறார், 'என்ன இருக்கிறது, இந்தியில்?' எப்பேர்ப்பட்ட கேள்வி! எங்கிருந்து புறப்பட்ட கேள்வி!!

பட்டாபிராமன் மட்டுமல்ல ஹேட்ஜ் எனும் காங்கிரஸ் அன்பர் டில்லி மேல் சபையில் கர்ஜித்திருக்கிறார், "தெற்கிலிருக்கும் மக்கள் இந்தி திணிப்பதை விரும்பவில்லை; உங்கள் இஷ்டம்போல் கூத்தடிக்கிறீர்கள். இப்படி இந்தியைக் கொண்டுவந்து திணிப்பதை எதிர்க்கிறேன்" என்பதாக.

கூத்தடித்து குளறுபடிசெய்கிறார்களாம், வடநாட்டினர்! கூறுவது, காங்கிரஸ் அன்பர்!! அந்தகைய குறுமதியைத் தான்கண்டிப்பதாகவும், அவ்வண்ணம் இந்தியைத் திணிப்பதை, தான் பலமாக எதிர்ப்பதாகவும் தெரிவிக்கிறார்! கூத்தடிப்பது—எனத் தோழர் குறிப்பிட்டது, 'அங்குள்ளோர், இந்தியா? இந்துஸ்தானியா? — இந்தி யென்றால், உத்தரப்பிரதேசத்து இந்தியா? மத்திய பிரதேசத்து இந்தியா?' — என்று குருக்ஷேத்ரம், நடத்திக்கொண்டிருப்பதை.

பட்டாபிராமனும், ஹெட்ஜேயும் மட்டுமல்ல—இன்னும் பலர்—இந்தியைத் தென்னாட்டில் திணித்த நண்பர் அவினாசிலிங்கம் உள்பட—இவ்வண்ணமே வெளியிட்டிருக்கிறார்கள். பாராளுமன்றத்தில், பலமான குற்றச்சாட்டுகளை வீசியிருக்கிறார்கள். அப்போது அவர்கள் எல்லோருடைய நாவிலும் நர்த்தனமாடிய சொல் ஒன்று உண்டு. அந்தச்சொல், நாம் வீசிய சொல்! அந்தச் சொல்லுக்காகத்தான், தாலமுத்துவையும் நடராசனையும் தத்தம் செய்தோம்—ஆயிரக்கணக்கான ஆண் பெண்களைச் சிறைச்சாலைக்கு அனுப்பினோம்—கர்ப்பிணிகளைக் காட்டில்விட்டு காட்டாட்சி நடத்திற்று காங்கிரஸ் ஆட்சி—குடந்தை வீதிகளில் குருதியை ஓடவிட்டது—சென்னை, அறப்போரில் தினசரி ஈடுபட்டது. அந்தச்சொல், நாம் அடிக்கடி கூறுவது! அதனை, அவர்கள் எடுத்து வீசியிருக்கிறார்கள்!!—அதுதான் ஆதிபத்யம் என்பது.

'இந்தி ஆதிபத்யம்' (Hindi imperialisin)—என்று, பேசியிருக்கிறார்கள். யார்? பேபிகந்தசாமியோ, கோவிந்தசாமி கச்சாயரோ, டாக்டர் கிருஷ்ணசாமியோ, வீரசாமியோ அல்ல! பட்டாபிராமன்—ஹெட்ஜே—அவினாசிலிங்கம். ஆச்சரியமான விஷயம்தானே! இந்தச் சொல்லை எடுத்துக்காட்டி, அந்தகைய ஆதிபத்யத்தை ஒழிக்கவேண்டுமென்பதற்காகவே அறப்போர் பல நடத்தினோம். அப்போது எள்ளி நகையாடியவர்கள், இவர்கள்! இப்போது, தெரிவிக்கிறார்கள் — இந்தி ஆதிபத்யமாம்! அதனை ஏற்க முடியாதாம்!!

கடந்த சில காலமாக இவ்வண்ணம், நாம் கூறியபோது கொக்கரித்தோர் எல்லாம், இப்படிக் காரசாரமாகக் கண்டிக்கத்தலைப்பட்டிருக்கிறார்கள். சந்தர்ப்பம்நேரும்போதெல்லாம், சரமாரியான காரணங்களை எடுத்துக்காட்டி, 'இந்தி எப்படிப் பொதுமொழியாகும்?', என்று கேட்

கின்றனர். அதன் ஒரு காட்சிதான், அன்பர் பட்டாபிராமன், 'நூறு வருஷம் ஆனாலும்' என்று ஆத்திரத்தோடு வெளியிட்டிருப்பது! இவ்விதம் ஆத்திரத்தைக் காட்டுபவர்கள் —காங்கிரஸ்காரர்கள்; எனவே, ஆச்சரியம் அதிகமாகிறது! அதுவும், தென்னாட்டிலிருந்து சென்ற காங்கிரஸ்காரர்கள் மட்டும், இவ்வண்ணம் பேசுகிறார்கள்—மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது!!

"பாராளும் சபையில் இந்திப் பற்றிய விவாதம் எப்போது வந்தாலும், வடநாட்டுக்காரர்கள் இந்தியிடம் சர்க்கார் ஆதரவுகாட்டவில்லை என்று கண்டிப்பதும்— தென்னாட்டுக்காரர்கள், இந்தி ஆதிக்கம் என்று காரசாரமாகக் கண்டிப்பதும் சகஜமாகி விட்டது," என்று 'மெயில்' ஏடு, குறிப்பொன்றில், கூறுகிறது. சகஜமாகி விட்டதாம், வடக்கும் தெற்கும் மோதிக்கொள்வது! இந்தியைத் திணிக்காதீர்—அது, ஆதிபத்ய வெறி—என்று கண்டிப்போர் பிறரல்ல; தென்னாட்டினர்—அதுவும் காங்கிரஸ் கட்சியினர். இதிலுள்ள உண்மையையும், வினையையும் நம்மை அன்றி யார் அறியமுடியும்?

முன்னாள் சென்னை முதல்வரும், இந்நாள் ஒரிசா கவர்னருமான குமாரசாமி ராஜா அவர்கள் இந்தி பற்றித் தமது கருத்தை வெளியிடுகையில், தேசிய மொழி என்று கூறப்படும் இந்தியில் "விஷயங்கள்" கிடையாதென்றும், பிறமொழிகளில் இருக்கும் விஷயங்களை எடுத்துக்கொள்ள அதுவளைந்துகொடுக்க வேண்டும் என்றும் இந்திமொழி தெரியாதவர்களை வசீகரிக்கக்கூடிய இலக்கிய அபிவிருத்தி அதனிடம் இல்லையென்றும், ஒற்றுமையை வளர்க்கும் தன்மையை அது பெற வேண்டும் என்றும், பேசியுள்ளார்.

அன்பர் குமாரசாமி ராஜா ஒரு காங்கிரஸ்காரர் என்பதை யாரும் மறக்கமுடியாது.

இப்பொழுது, இந்தி பற்றி யார் பேச முன் வந்தாலும், திடீரென்று அதை ஆதரித்தே தீரவேண்டும் என்று சொல்லத் தைரியம் ஏற்படுவதில்லை சிறப்பாக இந்தியைத் தேசிய மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிர்ப்பந்தத்துக்கு ஆளாக்கப்பட்டிருக்கும் காங்கிரஸ்காரர்கள் கூட அதைப்பற்றிப்பேச நேரிடுகிற போது சிறிது யோசனை செய்கிறார்கள். இந்தியா? இந்துஸ்தானியா? அதைத் தேசிய மொழியாக்கினால் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுமா? தேசிய மொழியாகும் தகுதி அதற்குண்டா? இலக்கணம் உண்டா? இலக்கியம் உண்டா? அதில் விஷயங்கள் இருக்கின்றனவா? ஒற்றுமையை வளர்க்கும் தன்மை அதற்குண்டா? என்ற இன்னபிற துறைகளில் இறங்கி இந்திமொழியைப்பற்றிய ஆராய்ச்சியில் நம்மிலும் ஒருபடி மேலே சென்று, அதனை நாட்டின் பொது மொழியாக்கக்கூடாது என்பதை வலியுறுத்தி வருகிறார்கள். அலகாபாத் பண்டிதரிலிருந்து, திருச்செங்கோடு பட்டாபிராமன்வரை எல்லோருமே, இந்த இந்திப் பிரச்னையில் ஈடுபட்டு, நம்முடைய குரலில் பேச ஆரம்பித்திருக்கிறார்கள்.

தென்னாட்டினர், எதிர்க்கிறார்கள்! ஆனால் அதே சமயத்தில், இதோ ஒருவர் பேசுகிறார், கேளுங்கள்:- "இந்திதான் இந்தத்தேசத்தினுடைய தேசீய பாஷையென்பதைத் திட்டவட்டமாக நாம் கூறிவிட்டோம். இந்திய அரசியலமைப்பிலும் முடிவு செய்திருக்கிறோம். அப்படியிருக்கும்போது தேசத்திலுள்ள ஒவ்வொருவரும் அதனைக் கற்றுக் கொள்வது தானே கடமை."

கடமையைப் போதிக்கிறார், இப்படிப் பேசியவர்! ஏனெனில், இந்திய அரசியலமைப்பில் முடிவு செய்யப்பட்டுவிட்ட விஷயமாம்—திட்ட வட்டமாகத் தீர்மானம் ஆகிவிட்டதாம். கூறுவது, தாண்டனல்ல, குன்ஸ்ரு அல்ல, மஜூம்தார் என்பவர்! யார் இந்த மஜூம்தார்? காங்கிரஸ்காரரல்ல, கம்யூனிஸ்டு! அவர் கூறுகிறார், அரசியலமைப்பும் ஏற்கெனவே செய்யப்பட்ட முடிவும் என்றும் சாசுவதமான பொருள் எனும் தொனியில்! இந்தத்தொனி, பிறவிஷயங்களில் ஏற்படாது—இது என்ன அரசியலமைப்பு, முதலாளித்துவ வாடையன்றோ வீசுகிறது, என்பார்; சர்க்காருடைய முடிவுகள் என்ன சாகாவரம் பெற்றவையா, எங்கள் சம்மட்டியடி வீழ்ந்தால் சுக்குநூறாகும் என்பார்; ஆனால் அந்தவீரம், விவேகம், இந்தி விஷயத்தில் ஏற்படவில்லை! ஏன்? —பதில், சராசரி மனிதனுக்கும் தெரியும்! வெளியிட்டால், இங்குள்ள கம்யூனிஸ்டு நண்பர்களின், 'ஜுரம்' அதிகமாகும்!!

இந்தி போன்ற பிரச்னைகள் வந்தால் தாண்டன் போன்ற வடநாட்டுக் காங்கிரஸ் வெறியர்கள் மட்டுமல்ல, சுசேதா-கிருபளானி போன்ற பிரஜா சோஷியலிஸ்டுகள் மட்டுமல்ல, கம்யூனிஸ்டுகளும் 'கதை'யை எடுத்துக் கொண்டு பாய்கிறார்கள். தவறு என்று கூறவில்லை நாம். அது அவர்கள் ஆசை! தமது மொழியை ஆசனத்தில் அமர்த்தும் அந்த ஆசை, அவர்களுக்கு இருக்காது என இங்குள்ள கம்யூனிஸ்டு நண்பர்கள் கூறுகிறார்களே, அதைக் குறிப்பிடவே, இதைக்கூறவேண்டியவர்களானோம்.

தெளிவாகத் தெரிகிறது—அன்றும் இன்றும் நாம், சொன்னோம்! சொல்லி வருகிறோம்!! இன்று அவர்கள்—தென்னாட்டுக் காங்கிரஸ்காரர்களே—சொல்லுகிறார்கள். வடநாட்டினரின் சூடு எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக உறைக்கிறதோ அந்த அளவுக்கு தென்னாட்டுக் காங்கிரஸ்காரர்களின் ஆத்திரம், அதிகமாகிறது—கண்டிப்பும் கோபமும் கனல் தெறிக்கிறது. இதன் சூட்சமத்தை, அறியவேண்டும். அதற்கு அறிவு இருந்தால்மட்டும்போதாது; இருதயத்தின் ஆழத்தைத் தடவிப் பார்க்கவேண்டிய ஆர்வமும் வேண்டும். இந்த ஆர்வம், எங்கிருந்து முளைக்கிறது? சொல்லுகிறார், பட்டாபிராமன்—'நூறு வருஷம் ஆனாலும்' என்று! என்ன பொருள் இதற்கு? முன்பெல்லாம், சொல்லுவாரா! சொன்ன நம்மீதன்றோ, பாய்வார்!! இப்போது எப்படியேற்படுகிறது அந்த உணர்ச்சி—எண்ணிட வேண்டும் இங்குள்ள தோழர்கள். உலகத்திலுள்ள இரண்டு கூடாரங்களைப்பற்றியும், அங்கே வீசும் முதலாளித்துவ வாடை, கம்யூனிச மணம் ஆகியவைகளின் விளக்கங்களைப்பற்றியும் பேசும்போது, உள்ளே இருக்கும் பிரச்னைகளை அறிந்துகொள்ளவேண்டும். அந்தப் பிரச்னை வானத்திலே இல்லை! இருதயத்திலே இருந்து எழும்புவது! ரஷ்யாவிலே இல்லை— திராவிட மகனின் எண்ணத்திலே இருப்பது!

(5-ம் பக்கம் பார்க்க)

அமைந்த பாதை

ப. வாணன்

வேலை கிடைத்தது!

"டேய்.........ஆறுமுகம்! இந்தாடா மூளி! ராத்திரிதானே எல்லாம் சொன்னேன். மூஞ்சியிலே வெயில் அடிக்கிறவரைக்கும் தூங்கிறியே! இந்த மாதிரி வேலைக்குப் போகிற இடத்திலேயும் தூங்கினு, எங்கே உருப்படறது.

இந்தாடா கழுதே, எழுந்திரு! பத்துமணிக்குள்ளே வரச்சொன்னருடா மானேஜர். இப்படித் தூங்கினு, அவர்கிட்டே எப்படிக் காலந்தள்ளப்போறே!" என்று சத்தியவண்ணம் வாயைப் பிளந்துகொண்டு தூங்கிக்கொண்டிருந்த ஆறுமுகத்தைத் தட்டி எழுப்பினுள், அவன் தாய் அஞ்சலை.

ஆறுமுகத்திற்கு உணர்வு வர ஐந்து நிமிடமாயிற்று. "உம்...!" என்று பெருமூச்சுவிட்டவண்ணம் எழுந்து உட்கார்ந்து சோம்பல் முறித்தான். அவன் கண்ணைத்திறந்து பார்த்தபோது அவனெதிரே சூரியன் பிரகாசமாகத் தோன்றிக்கொண்டிருந்தான். அஞ்சலை தன்னுடைய ஆத்திரமான பார்வையை அவன்மீது வீசிக்கொண்டிருந்தாள். அவளுடைய அதட்டல்களில் பழக்கப்பட்டுப்போன அவன், தன் பார்வையைக் குடிசையின் வேறொரு மூலைக்குத் திருப்பினுன். அந்தக் குடிசையின் மற்றொருமூலையிலே அவன் தங்கை செங்கமலம் ஆழ்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். அவளுடைய கிழிந்துபோன துணிகள் நாலாபக்கங்களிலும் புரண்டு கிடந்ததின் பலனுக அவளுடைய உடலின் இளமையும், இளமையின் சின்னமான திரேகக்கட்டும் நன்கு விளங்கியது. கருமையானலும் கவர்ச்சியோடிருந்த அவள் முகத்தில் அயர்வு தென்பட்டது. அவளுடைய மூச்சின் எதிரொலியாக விம்மி வடியும் மார்பகங்கள் மீது சூரிய ஒளி குடிசையின் ஓட்டைப் பாகங்கள் வழியாக வந்து விழுந்துகொண்டிருந்தது. அவளுடைய ஒரு கால் பூராவும் மூடப்படாமல் கிடந்தது. வயிறே, பசியின் காரணமாக ஒடுங்கி, மெல்லிய அவள் இடையின் அழகை அதிகப்படுத்திக் காட்டியவண்ணமிருந்தது.

அவளை உற்றுக் கவனித்தான் ஆறுமுகம். அவளுடைய அங்கங்களில் ஆங்காங்கே நகக்குறிகளும் வடுக்களும் காணப்பட்டன. முகம் பூராவும் ரத்தம் கட்டிச் சிவந்து காணப்பட்டது. இந்தக் காட்சியை அவனுல் நீண்டநேரம் பார்க்க முடியவில்லை. நேற்றிரவு அவன் வந்து படுக்கும்



போது செங்கமலம் இல்லை. ஆகவே அவள் இன்றிருக்கும் நிலையை அவனால் உணரமுடிந்தது!

அவனுடைய சோம்பல் நிலையைக் கண்ட அஞ்சலை மறுபடியும் பல்லவியை ஆரம்பித்தாள்.

"ஏண்டா, காலங்காத்தாலே எழுந்து, குளிச்சுட்டு போகணுமென்னு எத்தனை தடவை ராத்திரி சொன்னேன்......"

அவள் முடிப்பதற்குள் இடைமறுத்தான், ஆறுமுகம்.

"ஐயோ, போதுமே, அம்மா! இதோ எழுந்துட்டேனே. பின்னே, ஏன் தொணத் தொணவென்று......" என்று கூறிக்கொண்டே எழுந்து, அந்தக் கிழிந்து போன பாயை ஒரு உதை கொடுத்துத் தள்ளிவிட்டுக் குடிசைக்கு வெளியே வந்தான்.

*

"உத்தமநாதபுரம்" குழாயடியிலே தண்ணீர் வருகிறநேரத்திலே கூட்டம் தாங்கமுடியாது. அந்தச் சேரிக்கு இன்னும் இரண்டு குழாய்கள் போடப் போவதாக நாலைந்து ஆண்டுகளாகச் செய்திவந்து கொண்டிருக்கிறது. ஆனால் அங்கிருந்த ஐந்நூறு குடிசைகளுக்கும் அந்த ஒரு குழாய்தான் தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே பலநாட்கள் உத்தமநாதபுரத்து வாசிகள் குளிப்பதேயில்லை! குடிக்கத் தண்ணீர் கிடைத்தால் அதுவே அவர்களுக்குப் பரம திருப்தி.

ஆனாலும் "டிரைவர்" ஆறுமுகம் இந்த விதிக்கு விலக்கானவன். இருக்கின்ற பானைகளை உடைக்காமல் அவன் சீக்கிரம் குளித்துவிட்டுப் போனால் போதுமென்றுதான் அந்த குடிசை வாசிகள் எண்ணிக் கொள்வர். அந்தளவு ஆறுமுகத்தின் முரட்டுச் சுபாவம் புகழடைந்திருந்தது.

குடிசையை விட்டுக் கிளம்பிய ஆறுமுகத்திற்கு வெளியிலே, வரவேற்பு வழக்கம் போல நடந்தது.

"என்ன அண்ணே, காலங்காத்தாலே......?"

"அண்ணனிடம் ஒரு விஷயம் பேசணும், சாயங்காலமாப் பார்க்கலாமா?"

"ஏண்டா தம்பி, விடியங்காத்தாலே எங்கே......?" இப்படி பழகிய குரல்கள் வழக்கமான கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருந்தன. அரைத் தூக்கத்தில் எல்லோருக்கும் சைகையிலேயே பதில் கூறிக்கொண்டு குழாயடிக்கு வந்து சேர்ந்தான் ஆறுமுகம். அங்கே அவனுடைய உடற்பசியை அவ்வப்போது சாந்தி செய்யும் பொன்னி நின்று கொண்டிருந்தாள்!

வறுமையின் சின்னமான கிழிந்த தாவணியை இறுக்கக் கட்டிக்கொண்டு தூங்கி விழித்த மூஞ்சியுடன் பானையில் தண்ணீர் பிடித்துக்கொண்டிருந்தாள் பொன்னி.

செங்கமலத்தைவிட வசீகரவனிதையான அவள் முகத்தில் இருந்த கவர்ச்சி அலாதியான ஆசையின் எதிரொலி. அவளுடைய அகண்ட மார்பகங்களை தாங்கமுடியாமல் துவண்டு நின்றது அவளுடைய துடியிடை. என்ன அழகு இருந்தும் பயன் என்ன? கூழுக்கும் குஞ்சியழகுக்கும் ஏது சம்பந்தம்? வறட்சியான வாழ்க்கையில் உழன்று கொண்டிருந்த பரிதாப ஜீவன் அவள். அவளுடைய இயற்கை அழகைக் கண்டு துவண்டுபோனஷோக்கைமைனர்கள் சிலர் அவளைக் கண்டவுடன் தங்கள் இச்சைகளை வார்த்தைகளால் வாரியிறைக்கத் தயங்கவில்லை

"என்ன குட்டி, ஜாலக்பண்றே!"

"மாடு மாதிரி மிரள்றியே!"

"கொஞ்சம் சிரிச்சுத்தான் பாரேன். முத்தா உதிர்ந்திடும்?"

இதுவும், இன்னும் பலவிதமாகவும் பேசி அவளை கேலி செய்வர்—குறிப்புக்காட்டி தனியிடம் அழைப்பர்.

ஆனால் பொன்னி புது வழி செல்லப் பயந்து ஒதுங்கினாள். கடுகடுத்த மூஞ்சியையும் கண்ணீரையும் பானமாக்கி நீண்டநாட்கள் அவர்கள் காட்டிய பாதையில் பயணம் துவக்காமல் தப்பித்து வந்தாள்.

ஆனால் ஆறுமுகம் எங்கிருந்தோ வந்தான்; எப்படியோ அவள் இருதயத்திற்குள் நுழைந்து கொண்டான். அதற்குப்பின் அவளுடைய வாழ்க்கைப் பாதையே மாறிவிட்டது. கட்டிய கணவனிடம்கூட பொன்னி அளவு ஆசை வைத்திருக்க மாட்டார்கள், பெண்கள். உத்தமநாதபுரத்தில் பல்வேறு குடிசையில் வாழும் கணவன் — மனைவிகளைவிட ஒற்றுமை அதிகம். என்றைக்காவது ஒரு நாளைக்குத்தான் ஆறுமுகத்திற்கு பொன்னிமேல் ஆசை வரும் ஆனால் அன்று அந்த சேரியிலேயே மதனும் ரதியும், பொன்னியும் ஆறுமுகமும்தான்!

பொன்னிக்கு ஆறுமுகத்தின் பழக்கம் ஏற்பட்டபின் உத்தமநாதபுரத்திலே அவளுக்கு மரியாதை அதிகம்.

'நமக்கேனடா இந்த பூனை...... ஆறுமுகம் முரடன்!"

"ஏனப்பா இந்த வீண் வம்பு. மோட்டார் ஓட்டி இப்ப நாலு காசு சம்பாதிக்கிறான். அவன் வழிக்கு நாம் ஏன் போகணும்!"

இப்படியெல்லாம்பேசிக்கொண்டு பொன்னியை அநேகமாக எந்த வெறியனும் தொந்தரவு செய்வதில்லை.

ஆனால், ஆறுமுகத்தின் தாய் அஞ்சலையின் தொந்தரவு மாத்திரம் அவ்வப்போது ஏற்படும்!

என்றைக்காவது ஆறுமுகம் பொன்னி வீடு வந்து போனான் என்ற செய்தி அஞ்சலைக்கு தெரிந்தால் போதும். உடனே பொன்னியின் குடிசைமீது படையெடுப்பாள்.

"அடிபாதகி! என்மகன் சம்பாதித்ததையெல்லாம் இப்படி வாரிக் கொட்டிக்கிறே, எங்கள் வயிறு என்ன ஆகிறதடி......கள்ளி...... காதகி......" இவைகள் எழுதக் கூடிய அளவிலே அவள் உச்சரிக்கும் வார்த்தைகள்.

பொன்னி பேச முயற்சிப்பாள் பின்பேசிப்பயனென்னவென்று குடிசைக்குள் போய் விடுவாள். இந்த மௌனபதில் அஞ்சலையின் ஆத்திரத்தை மேலும் கிளறும்.

"இருடி... இந்தத்தைமாதத்திலே என் மகனுக்கு அண்ணாமலையம்மா மகளை முடிச்சு வைக்கிறேன், அப்புறம் பாருடி பஜாரி......!" என்று கூக்குரலிட்டு விட்டுப்போவாள். பொன்னிக்கு இந்த வார்த்தைகள் பழக்கமானது. காற்றோடு அலைகளை

(13-ம் பக்கம் பார்க்க)

உண்மை கலந்த கற்பனை

சமயபுரத்தம்மன் தொடுக்கும் மான நஷ்ட வழக்கு

[அண்ணாதுரை]

காருண்யமுள்ள சர்க்காருக்கு,

சகல ரோக நிவாரணமளித்து, சகல சம்பத்தும் சௌபாக்யமும் அருளி, சாந்தி சந்தோஷம்தந்து, சகலருக்கும் அருள்பாலித்துவரும் சமயபுரத்தம்மன், அனுப்பிவைக்கும், மான நஷ்ட வழக்குக்கான துவக்கக் கடிதம் இது.

மதச்சார்பற்ற சர்க்கார் என்று சொல்லிக்கொண்டாலும், எந்த மத சம்பந்தமான திருவிழாவுக்கும், நல்ல நாளுக்கும், பூஜை நாளுக்கும் 'லீவ்'கொடுத்து, மக்களைக் கோயில் குளம் சென்று, பக்தியைக் காட்டிடும் சடங்கு சம்பிரதாயங்களைச் செய்யும்படித் தூண்டியும், காய்ந்த வயிறுபடைத்த மக்கள் கோபத்துடன் எதிர்ப்புக்காட்டும்போது, பக்தி செய்யுங்கள், சகலகஷ்டமும் தீர்ந்துபோகும் என்று கூறிப் பஜனையின் மேம்பாட்டை எடுத்துக் கூறியும், கோபுரத்தைக்கோலோச்சுமிடத்துச் சின்னமாகக் கொண்டிருப்பதன்மூலம், மதத்தை மறந்துவிடவில்லை என்பதைத் தெள்ளத் தெளியக் காட்டியும் வருகிற காரணத்தால், இந்தச் சர்க்கார், மதத்தை, குறிப்பாக இந்து மதத்தை, சிறப்பாக புராண மதத்தைக் கட்டிக் காத்திடும் விரதம் கொண்டது என்பது விளக்கமாகத் தெரிவதால், எனக்குத் தகுந்த நியாயம் கிடைக்கும் என்ற பரிபூரண நம்பிக்கையுடன் இந்த 'மகஜரை' அனுப்புகிறேன்.

காருண்யமிக்க சர்க்காரில் அங்கம் வகிக்கும் பாக்கியம் பெற்ற அமைச்சர்கள், அடிக்கடி மதத்தின் அவசியத்தையும், ஆலயவழிபாட்டினால் கிடைக்கும் மேம்பாட்டையும் மக்களுக்கு எடுத்துக்கூறி வருவதுகேட்டு, நான் புளகாங்கிதமடைந்தேன். அதிலும் ஆச்சாரியார் செய்துவந்த அரிய சத்கதா காலட்சேபத்தைக் கேட்டு ஆனந்தத் தாண்டவமாடினேன். நாட்டை ஆளும் பெருந்தலைவர்களே இவ்வண்ணம் இதோபதேசம் செய்யும்போது, பகுத்தறிவு என்றும் விஞ்ஞானம் என்றும், முன்னேற்றம் என்றும் மூலகாரணத்தைக் கண்டறிவது என்றும் ஏதோதோ கூறிக்கொண்டு, காவியங்களைக் கட்டுக்கதைகள் என்றும், அந்தக் கட்டுக்கதைகள் கலைக்கு உதவா என்றும் வெட்டிப் பேச்சுப் பேசிக்கொண்டு, இதற்கென்ன காரணம், அது எப்படிப் பொருந்தும், இது எங்ஙனம் நடந்திருக்கும், இப்படிச்செய்வது அறிவுள்ள செயலா என்றெல்லாம் கேட்டுக் கேட்டு விதண்டாவாதம் பேசியும் சிலபலர், மதத்தின் செல்வாக்கை, புராண இதிகாசாதிகளின் ஆதிக்கத்தை எதிர்த்தொழிக்க முயற்சித்து, வெற்றி எப்படிக் காணமுடியும்! இதை எண்ணும்போதே எனக்கு, 'ஆயிரம் இளநீர் அபிஷேகம்' செய்யும்போது ஏற்படும் ஆனந்தத்தைவிட அதிகம் உண்டாயிற்று, இவ்வளவு பக்திமான்களாக, இருப்பதால்தான் நான், நம்பிக்கையுடன், இந்த 'மனு' அனுப்பிவைத்திருக்கிறேன்.

வெளிப்படையாகக் கூறிக்கொண்டால், தவறு என்ன? முதலிலே எனக்குத் துளியும் விருப்பம் உண்டாகவில்லை-வெட்கமாகக்கூட இருந்தது. எங்கே கேலி பேசவும் கேவலமாகக் கருதவும், இது இடங்கொடுத்துவிடுகிறதோ என்று அஞ்சினேன், பிறகு தீர்க்கமாக யோசித்ததில், நமது பக்தரிடம் முறையிட்டுக்கொள்வதிலே தவறு இல்லை, கேவலமும் இல்லை என்ற தைரியம் பிறந்தது; பிறகுதான் இதனை எழுதினேன். மறந்தே போனேன், இத்துடன் வைத்திருக்கும் பொட்டலத்தில் ஆறு வேப்பிலைச் சருகு இருக்கும், குங்குமமும் இருக்கும்—மகா சக்தி வாய்ந்தது, எடுத்து உபயோகித்துக் கொண்டு இகபரசுகம் பெறக் கடவீர்களாக!

என்னைப்பற்றி விளக்கந்தான் வேண்டி இருக்கிறது — ஏன் என்றால், வழக்கு அல்லவா தொடுத்திடவேண்டிய 'காலம்' வந்துவிட்டது; அதனால்தான். தற்பெருமை என்று தவறு செய்து யாரும் எண்ணிவிடாதீர்கள்.

திருச்சிராப்பள்ளிக்கு அருகே உள்ள 'தேவதை' நான்.

பெயர், சமயபுரத்தாள் — என் பெயரே ஊருக்குமாகி, சமயபுரம் என்று இருப்பதை உலகு அறியும்.

இந்தச் சமயபுரத்திலே, திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் என்னை, மஹாதேவி! மாதா! அம்மை! அருளும் தாய்! எவ்வரமும் அருளும் எங்கள் சமயபுரத்தம்மை! எந்த ரோகமும் போக்கும் இறைவி! என்றெல்லாம் கூறுவர்.

கோயிலும், என் கோயிலின் செல்வாக்கும், மெள்ள மெள்ள ஆனால் நிச்சயமாக வளர்ந்து வளர்ந்து, நான், சகலரும் போற்றும் சமயபுரத்தம்மை ஆனேன்.

என்னை நாடிடாத பேர்வழிகள் இல்லை, பாடிடாத திருவாயில்லை! எவ்வளவு உருக்கமான கீதங்களைக் கேட்டிருக்கிறேன். எப்படிப்பட்ட அருமையான அர்ச்சனைகள், அப்பப்பா! என் மெய் சிலிர்த்துவிடு

கிறது, இப்போது எண்ணிக் கொண்டாலும்.

பள்ளிகொண்டிருக்கும் பரந்தாமன், ரங்கநாதன், மிகமிக நீண்டகாலமாக ஸ்ரீரங்கத்தில் 'ராஜாங்கம்' நடாத்திக்கொண்டு வருகிறான் என்றாலும் என்னுடைய ஆலயத்தின் புகழ், அவனையே எழுந்துவந்து பார்த்துவிட்டுப்போகச் செய்யுமோ என்று எண்ணவேண்டிய அளவிலே வளர்ந்தது.

தங்கச் சிலைபோன்ற என் குழந்தைக்கு, தாயே! கண்ணிலே 'பூ' விழுந்துவிட்டது—போடாத மருந்தில்லை, தேடாத டாக்டரில்லை, எதிலும் எள்ளளவு பலனும் கண்டேனில்லை, அம்மையே! உன் சன்னிதியில் கொண்டுவந்து கிடத்திவிட்டேன், இனி உன் அருள்தான், இந்தப் பொற்கொடியைக்காப்பாற்ற வேண்டும், கோயில் கோயிலாகச் சுற்றிப் பெற்றெடுத்த குழந்தையம்மா இது! சமயபுரத்தாளே! உன் மகிமையைத் தெரிந்துதான் இங்கே வந்து அடைக்கலம் புகுந்தேன், உன் பாதத்திலே இந்தக் குழந்தையை வைத்துவிட்டேன், இனி நீயே துணை, நீயேகதி, உன் 'பிச்சை' தான் இந்தக் குழந்தை. நீ கண் திறந்து பார்த்தால்தான் குழந்தை பிழைக்கும்! தாயே! தங்கத்தாலே கண் மலர் செய்து காணிக்கை தருகிறேன்! வெள்ளித் தொட்டில் செய்து வைக்கிறேன்! ஆயிரம் இளநீர் அபிஷேகத்துக்கு ஏற்பாடுசெய்கிறேன்! ஐயாயிரம ஆரஞ்சு படைக்கிறேன்! பால் பாயாசத்துடன்—பருப்பு வகையுடன், பரமான்னம் செய்து படைக்கிறேன்! உன் திருக்கோயிலை, ஒவ்வொரு வாரமும்சுற்றி வருகிறேன்! திருவிளக்கு வைக்கிறேன், திருவிழா நடத்துகிறேன், தேவி! தயாபரி! தேனபிஷேகம் செய்விக்கிறேன், சமயபுரத்தம்மே! சகலருக்கும் தாயானவளே! உன் அருளைத் தாருமம்மா! உன்னாலே ஆகுமம்மா!—என்றெல்லாம் பஜிப்பார்கள். நினைத்தாலே, பெருமூச்சு விடவேண்டும்போலிருக்கிறது.

ஆண்டு எட்டு ஆயிற்று; எனக்கான அதே நாளில் மணமான எதிர் வீட்டு ஏமலதாவுக்கு. நாலாவது குழந்தை—நாரும் நரப்புமாகத்தான் இருக்கிறது, என்றாலும் நாலாவது குழந்தை! என் பாழும் வயிற்றிலேயோ இதுவரை ஒரு பூச்சி புழுவும் இல்லை! சாப்பிடாத டானிக் இல்லை, பார்க்காத லேடி டாக்டர் இல்லை, டஜன் கணக்கில் லோத்ரா சாப்பிட்டாகிவிட்டது, சித்த வைத்ய செந்தூரமும் 'டப்பி டப்பி'யாகச் சாப்பிட்டாகிவிட்டது, ராமேஸ்வர முழுக்காயிற்று, ஊஹூம்! பலன் இல்லை, சமயபுரத்தம்மே! நீதான் எனக்கு ஒரு குழந்தை அருளவேண்டும், என் குலம் தழைக்க அருள்பாலிக்க வேண்டும், சொத்து இருக்கிறது இலட்சக் கணக்கில், சுகம் இருக்கிறது பிறர் பார்த்துப் பொறாமைப் படும்வகையில், வாரிஎடுத்து அணைத்துக்கொள்ள ஒரு குழந்தை தான் இல்லை, ஒரு பிள்ளைக்கனி அமுதை, தாயே! நீதான் தரவேண்டும்! பிறந்ததும், உன் சன்னிதிக்குக் கொண்டு வந்து, குழந்தையின் எடைக்கு எடை வெள்ளி தருவேன், பெண்ணானால் சமயபுரத்தாள் என்றே பெயரிடுவேன், பிள்ளையானால், சமயபுரத்தாசன் என்று பெயர் சூட்டுவேன், இன்னமும் என்னைச் சோதிக்காதே என்னம்மே! உன் அருளைத் தாருமம்மா!—என்று உள்ளம் உருக உருக வேண்டிக்கொள்வார்கள்.

என்னமோ ஏதோ என்று இருந்து விட்டேன்—சொறிந்ததால் ஏற்பட்ட கிறல் என்று எண்ணிக் கொண்டேன், ஆனால் கிறல், வளர்ந்து வளர்ந்து, வாடைமிகும் நீர் கசியலாயிற்று, நாட்டு வைத்தியர் பார்த்தார், இங்கிலிஷ் மருந்தும் சாப்பிட்டாயிற்று, தேவி! இது மறையக்காணோம், குறையக் காணோம், பார்க்கப் பயங்கரமானதாகிவிட்டது, பக்கம் சென்றால் நாற்றமடிக்கிறது என்று எனக்குத் தெரியாமல் என் மனைவியே, அடுத்த வீட்டுக்காரியிடம் பேசிக்கொள்கிறாள், என்ன கர்மமோ! என்னபாபம் செய்தேனோ! எனக்கு வந்தது இந்த நோய்! குஷ்டம் என்கிறார்கள், தேவி! குஷ்டமாம் இது! யாருக்கு என்ன குறை செய்தேனோ, குலதெய்வமே! எனக்குக் குஷ்டம் ஏன்வந்ததோ போகக் காணோம்! உன் கோயிலைச் சுற்றினால், தீராதரோகமில்லை என்று தெரிந்தவர்கள் சொன்னார்கள், உன் கண் பார்வை பட்டால் போதும், கடும் குஷ்டம் நொடியில் போய்விடுமே, பொன்நிற மேனியை, தேவி! நீ நினைத்தால் தர இயலாதா! சகல சக்தியும் உன்னிடம் இருக்கும்போது, சமயபுரத்தாளே! இந்தப் பாவியின் குஷ்டத்தைப் போக்குவதா ஆகாத காரியம். என் சக்தியானுசாரம், நான் கைங்கரியம் செய்வேன் அம்மையே! வீடு வாசலை விற்றுக்கூட நான் உனக்குக் கைங்கரியம் செய்வேன்! இந்தத் தீவினையைத் துடைத்துவிடம்மா! தீராத வல்வினையைத் தீர்த்து வைக்கும் பேராற்றல் பெற்றவளே! சீரும் சமயபுரத்தே செங்கோலோச்சிப் பாராளும் மாதாவே, பாரம்மா என் கதியை!—என்று கண்ணீர் கசியும் நிலையில் கை கூப்பித் தொழுது நிற்பார்கள்.

பாலம் வேண்டும், பள்ளிக்கூடம் வேண்டும், பாதை வேண்டும், வேலை வேண்டும், பல பொருளின் விலை குறைய வேண்டும், பாரமான வரி குறைய வேண்டும், என்று பன்னிப் பன்னி எழுதிப் பாமர மக்கள் தொல்லை தருகிறார்கள், தெரியும் எனக்கு. அந்தத் தொல்லையுடன் சேர்த்து நானும் தொல்லை தருவதாக எண்ணிக் கொள்ளாதீர்—சத்தத்தின் அளவைக் குறைத்துக் கொள்கிறேன்—மனதிலே உள்ள கஷ்டம் மலை போலிருக்கிறது, அதனால், இவ்வளவு கூறவேண்டி வருகிறது. இனிச்சுருக்கிக் கூறுகிறேன், குழந்தை வேண்டியும், நோய் நீக்கச் சொல்லியும், பித்தத்தைப் போக்கச் சொல்லியும், பேய்பிசாசை ஓட்டச் சொல்லியும், பொருள் வேண்டியும் பிழைப்பு வேண்டியும்

வட ஆற்காடு மாவட்ட மாநாடு

16—5—54-பகல் 1-மணிக்கு வேலூர் டவுன்ஹாலில் வ. ஆ. மா. செயற்குழு கூட்டம் நடைபெறும். எல்லா மாவட்ட பிரதிநிதிகளும் வருகை தர வேண்டுகின்றேன்.

பொருள்:- மாவட்ட இரண்டாவது மாநாடு; இடம்-நாள்-குறித்தல் வரவேற்புக்குழு தேர்தல்.

ஏ. எல். சி. கிருட்டிணசாமி
மாவட்ட செயலாளர்.

தக்க இடத்தில் வரன் வேண்டியும், விரோதியைத் தரைமட்டமாக்க வேண்டியும் என்னை நாடி பக்தர்கள் சாரை சாரையாக வந்த வண்ணம் இருப்பர்!

நடந்து வருவர், குடும்பம் குடும்பமாக வருவர், குளித்துக் குங்குமம் அணிந்து வருவர், இடுப்பில் குழந்தையுடன் வருவர். வைரத் தோடணிந்த வத்சலாவும் வருவாள்; வயிற்றுவலிக்காரி வேலாத்தாளும் வருவாள்; காசநோய் பிடித்த கணவானும் வருவான்; மேகநோய் பிடித்த மைனரும் வருவான். இன்ன குலத்தார், இன்ன ஜாதியார் என்றில்லை, சகலரும் வருவர், சம்பிரமமாகப் பூஜைகள் செய்வர்; சோடசோபசாரம் செய்வர்; சொர்ணாபிஷேகம் செய்வர், தோத்திரம் செய்வர்; துதி பாடுவர்; அபிஷேகம் நடக்கும், ஆராதனை செய்வர்; ஓயாது நடக்கும். ஒரு குறையுமின்றி, நான், ஈடு எதிர்ப்பின்றி, எட்டுத் திக்கும் என் புகழ் பரப்பி, இலட்சோபலட்சம் மக்களின் 'இஷ்டதேவதை'யாகி, கம்பீரமாகக் கொலுவீற்றிருந்து வந்தேன்—இப்போதோ.......நெஞ்சு 'பகீர்' என்கிறது; நாளை நடப்பதை யார் அறிவார் என்று எண்ணி அழலாமா என்றுகூடத் தோன்றுகிறது. வந்தது கேடு! விபத்து, பெரும் விபத்து வந்திருக்கிறது! என் அரசுக்கு அபாயம், என் அந்தஸ்துக்கு ஆட்டம் கொடுத்திருக்கிறது, என் செல்வாக்கைச் சிதைக்கச் சதி நடைபெறுகிறது, என் கோலாகல வாழ்வுக்கு வேட்டு வைக்கக் கொடியவர்கள் கிளம்பியுள்ளனர், என் செய்வேன், எப்படி இதிலிருந்தும் தப்பிப் பிழைப்பேன் என்று எண்ணும்போதே, குலை நடுக்கமெடுக்கிறது.

செந்தமிழ் நாட்டிலே எனக்கென்று ஏற்பட்டு, தழைத்து வந்துள்ள செல்வாக்கைச் சிதைக்கும் சிறு செயலை மிகத் துணிவுடன் செய்கிறார்கள், சிறுமதியாளர்கள். அச்செயலைக் கண்டிக்காமல், சீரழிவான அந்தப் போக்கை எதிர்க்காமல் இருப்பதுமட்டுமல்ல, மக்கள் அதனை ஆதரிக்கவும் செய்கிறார்கள்.

எடுத்துக்காட்டுக்காகக் கூறுகிறேன், கோபத்தால் சாபமிடுகிறேன் என்று தவறாகக் கருதிவிட வேண்டாம், மக்களிடம் செல்வாக்குப் பெற்று சட்டப்படி மந்திரிகளாகி சர்க்காரை நடத்திச் செல்கிறீர்கள், உங்கள் கண் எதிரிலேயே உங்களைத் துச்சமென்று மதித்து, உங்கள் ஆணையை மதியாமல், ஒரு கூட்டத்தார் 'போட்டி சர்க்கார்' அமைத்து, அதனைப் படாடோபமாக விளம்பரம் செய்து, பாமர மக்களின் ஆதரவைத் திரட்டி, எமது அமுலுக்கு அடங்கி நடந்து வாரீர் என்று கட்டளைகள் பிறப்பித்தால் உங்களுக்குக் கடும் கோபம் பிறவாதா, மனம் பதறாதா! சகலவிதமான அதிகாரமும் பெற்று, 'கண் கண்ட தெய்வமாய்', 'கடாட்சிக்கும் தேவியாய்' அரசோச்சி வந்துகொண்டிருக்கிறேன், எனக்கு ஒரு 'போட்டி சர்க்கார்' அமைத்திருக்கிறார்கள். புல்லர்களின் செயலல்லவா, இது! புன்னகையா பிறக்கும் இதனைக் கண்டு! உங்களிடம் உண்மையை உரைப்பதிலே தவறென்ன, நான் உங்களுக்காக அனுப்பியுள்ள வேப்பிலையிலே என் கண்ணீர் கலந்திருக்கிறது! அவ்வளவு மனக் கஷ்டம்!

எப்படிப்பட்ட செல்வாக்கு எனக்கு என்று எண்ணுகிறீர்கள்? விரதமிருப்போர் எவ்வளவு, வீழ்ந்து வணங்கினோர் எவ்வளவு! என் சன்னதியை நாடி வந்த மோட்டார்கள் எவ்வளவு வகையானவை, என்னைப் பூஜிக்க பூபதிகள் எவ்வளவு!! பூரித்துப் போகாமலிருக்க முடியுமா? ஆயுள் தண்டனை பெற்று, ஆண்டு இரண்டு சிறையில் அடைபட்டிருந்த ஏழிசை மன்னர் தியாகராஜ பாகவதர், வெள்ளைக்காரநாட்டு பாரிஸ்டரும், அவர் கண்டு மெச்சிப் பாராட்டத்தக்க அறிவாற்றல் கொண்ட சென்னை பாரிஸ்டர் எதிராஜ்ஜும் காட்டிய திறமையால், விடுதலை செய்யப்பட்டார்—உடனே பாகவதர், என் சன்னதிக்கு வந்தார், பயபக்தி விசுவாசத்துடன் தொழுதார். பூஜைகள் செய்தார், இசையால் அபிஷேகம் செய்தார்,—என் செல்வாக்கு எவ்வளவு என்பதை விளக்க ஒரு சிறு எடுத்துக்காட்டு! இப்படிப்பட்ட என் செல்வாக்கு சீரழியும் காலமும் பிறந்ததே என்று எண்ணும்போது என் மனம் எரிமலையாகித்தானே தீரும். சலிக்காமல் என் கோயிலைச் சுற்றினர், சளைக்காமல் என் நாமத்தைப் பஜித்தனர், என்னால் ஆகாதது எதுவுமில்லை என்று வாயாரப் பேசினர்—அவர்கள் கேட்ட வரம் அவ்வளவும் கொடுத்தேனா, தீராத வல்வினையைத் தீர்த்துவிட்டேனா, கோரிக்கைகளை நிறைவேற்றினேனா என்று கேட்கவோ, ஆராயவோ, என் 'பக்தகோடிகள்' எண்ணம் கொள்ளவில்லை. தொழுதவண்ணம் இருந்தனர், இப்போது நான் அழுதவண்ணம் இருக்கிறேன்! பழமலையைக் கண்டேன், பால் குளம் கண்டேன், பட்டாடை போர் போராக, பலகாரவகை குவியல் குவியலாக, பரிமள கந்தம், பலவகை புஷ்பம் பலகாததூரம் மணம் பரப்பும் அளவுக்குக் கண்டேன்! கண்ட பிறகு, எனக்குக் கலக்கமா பிறக்கும்? குறைகளைத் தீர்த்துவைத்தாலும், இயலாதுபோயினும், இந்தப் பக்தர்கள் நமக்கு ஒரு குறையும் வைக்கமாட்டார்கள் என்று எண்ணிக் களித்தேன் — இறுமார்ந்தும் கிடந்தேன். பாமரமக்கள் மட்டுமா, என் பக்தர்களாக இருந்தனர்! பாரிஸ்டரும் டாக்டரும், என்ஜினியரும் கலெக்டரும், போலீஸ் அதிகாரியும் போர் வீரரும், என் கோயிலை வலம்வரக் கண்டேன்! அவரவர் அவரவருக்கு ஆதிக்கம் இருக்கும் துறைகளிலே இருந்த மற்றவர்களை என்னிடம் அழைத்துவரும் தூதுவராயினர்! என் துரைத்தனத்துக்கு அடங்கி இருந்தவர்கள், சாமான்யமானவர்களல்ல! அப்படிப்பட்ட எனக்கு ....!!

சமயபுரத்தம்மையைத் தரிசிக்கச் செல்கிறேன்—சமயபுரத்தாளுக்குப் பூஜை நடத்தினேன் — சமயபுரத்தம்மைக்கு வேண்டிக்கொண்டிருக்கிறேன்—என்று ஊர் மக்கள் பேசிடக்கேட்டு உள்ளம் மகிழ்ந்து இருந்துவந்த எனக்குக் காதிலே நாராசம்போல விழலாயிற்று, வேறோர் பேச்சு!

சமயமாவது, புரமாவது, பூஜையாவது வினையைத் தீர்ப்பதாவது

(10-ம் பக்கம் பார்க்க)

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரில் ஈடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!!

திராவிடநாடு

காஞ்சி] 16—5—54 [ஞாயிறு

சட்ட சபையில் நாம்!

★

இடந்தேடிகளே! அச்சப்படாதீர்கள்! பொச்சரிப்புக்காரர்களே! அங்கேயும் செல்வாக்கா என்று எண்ணிக் காய்ந்து கருகிவிடாதீர்கள்! நீட்டிய தாளில் கையெழுத்திடும் நேர்த்தியான சுபாவம்கொண்டோரே! விடமாட்டோம், விடவே மாட்டோம் என்று வீராப்புப்பேசக் கிளம்பி விடாதீர்கள். தலைப்பில் சட்ட சபையில் நாம், என்று குறிப்பிட்டிருப்பது, ஆட்கள் செல்வது குறித்து எழுதப்பட்டதல்ல, சட்டசபையிலே நமது கருத்துக்கள் உலவி, மணம் கமழ்வது குறித்துத்தான்.

திராவிட இயக்கம், சட்டசபை செல்லும் பாதையிலே இன்று இல்லை. எனினும், திராவிட இயக்கத்துக்கு, மக்களிடம் வளர்ந்துவிட்டிருக்கும் பேராதரவு, இன்று அந்த இயக்கத்தின் கருத்துக்கள் சட்டசபையிலே பேசப்படவும், கவனிக்கப்படவுமான நல்லதோர் நிலைமையை உண்டாக்கிவிட்டிருக்கிறது. மகிழ்கிறோம்.

பிரபுக்கள் கட்சி என்று பிரிந்த பிறகு குணவான்கள் சிலர் குற்றம் கூறித்தான் வருகிறார்கள்; என்றாலும், சட்டசபையில் இதுபோது பணியாற்றி வரும் திராவிட சட்டசபைக்கட்சி, திராவிட இயக்கக் கருத்துக்களை, வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் வலியுறுத்திக் கூறி, ஆதரவு திரட்டும், நல்லணியாகத் திகழ்கிறது.

திராவிட கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவைகளின் வேலை முறைகளுக்கும் திராவிட சட்ட சபைக் கட்சியின் வேலை முறைகளுக்கும், தொடர்பு இல்லாமலிருக்கலாம்—சிலவற்றிலே பொருத்தம் இல்லாமற் கூடப் போய்விடக் கூடும். ஆனால் திராவிட சட்ட சபைக் கட்சி, திராவிடரின் நல்வாழ்வுக்கான முயற்சிகளிலே, வாய்ப்புக்கும் வசதிக்கும் ஏற்றவண்ணம் பாடுபடுகிறது என்பதறிந்து அதனைப் பாராட்டுகிறோம். தெளிவும் துணிவும், தூய்மையும் தியாக உள்ளமும், திராவிட சட்ட சபைக் கட்சிக்கு, மேலும் மேலும் வலு அளிக்கும். பொது மக்களிடம் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதிலே, அவர்கள், இப்போது காட்டுவதைவிட அதிகமான அளவு அக்கறை காட்ட வேண்டும். பொதுப் பணியினருக்கு, அந்தத் தொடர்புதான், நல்லாசான், நண்பன், வழிகாட்டி! அந்தத் தொடர்பை அறவே வெறுத்து, ஆமையோ, ஊமையோ என்று ஒதுங்கிவாழ்ந்து வந்தவர்களின் சுயசரிதத்தைக் கூர்ந்து பார்த்தால், அத்தகையவர்கள், சமயம் கிடைத்ததும் சருக்கி விழவும், பதவி காட்டப்பட்டதும் பல்லிளிக்கவும், தயாராகக் காத்துக் கொண்டிருப்பவர்கள் என்பது விளங்கும்.

அரசியல் நேர்மையை மதிக்கும் பண்பு பட்டுக்கொண்டுவரும் இந்த நாட்களிலே, இடையறாத பொது மக்கள் தொடர்புதான், மாமருந்தாக அமையும்.

திராவிட சட்டசபைக் கட்சி' முக்கிய எதிர்க்கட்சியாக அமருவதற்கான நிலையைப்பெற்றிருக்கிறது. விரைவிலே அந்த 'மேலான' இடமளிக்கப்படும் என்று நம்புகிறோம். புதுநிலை பிறக்கும்போது, பொறுப்பும் வளருகிறது என்பதை அவர்கள் அறியாதவர்களல்ல. நுண்ணிய அரசியல் அறிவு படைத்தவர்களின் அணிவகுப்பு அது. எனினும், ஒன்று கூறுவோம், பொதுமக்களின் நலனுக்கான பிரச்னைகளிலே, கருத்துரை கூறுவதற்கான 'கூட்டுத் தெளிவு' அவர்களிடம் எழ வேண்டும். புதிய புதிய பிரச்னைகள் எழும்போதெல்லாம், கட்சிக் கூட்டம் நடாத்தி, கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டு, தெளிவான ஒரு முடிவு எடுத்து, சட்டசபையிலே அமரும்போது பிளக்கப்பட முடியாத படை என்று உற்றார் மகிழத்தக்க வகையிலேயும், மாற்றார் மருளத்தக்க முறையிலேயும், பொது மக்கள் பாராட்டத்தக்க வகையிலும், விளங்கவேண்டும்.

இதனை நமது அறிவுரை என்று கருதாது, நமது ஆசை என்ற முறையில், அவர்கள் வரவேற்கவேண்டுகிறோம்.

இம்முறை சட்டசபைக் கூட்டத்தில், திராவிட சட்டசபைக் கட்சியின் பணி பலரும் பாராட்டும் வகையில் பன்முறை நிகழ்ந்தது, அகமகிழ்கிறோம்.

வைதீகப் பெரும் பாறையை உடைத்தெறிந்த அறிவுச் சம்மட்டியாம் சுயமரியாதை இயக்கத்தின் கருத்துக்களைப் பலர், அறிவாற்றலுடன், சட்டசபையில் எடுத்துரைத்தது, சட்டசபை நடவடிக்கைக்கே ஓர் தனி எழிலைக் கொடுத்திருக்கிறது.

கடவுட் கதைகளும், புராணத் துணுக்குகளும், சம்பிரதாயமும் சட்டசபையிலே அலசப்பட்டன. புரோகிதத் திருமணப் புரட்டையும், புராண இதிகாசக் கருத்துகளைத் தாங்கி நிற்கும் சட்டதிட்ட அமைப்பையும், நமது நண்பர் தோழர் கோவிந்தசாமி ஆளும் கட்சியினரும் ஆமோதித்துத் தீரவேண்டிய முறையிலே காரணம் காட்டிக் கண்டித்திருக்கிறார். நமது அன்பர் டி. ஷண்முகம் அவர்கள், தமக்கே உரித்தான ஆர்வம் ததும்பும் முறையிலும் நடையிலும், சுயமரியாதைக் கருத்துகளை எடுத்துரைத்திருக்கிறார்.

இராமனும், பரதனும், அரங்கத்

துக்கு அழைத்து வரப்பட்டார்கள்! அவர்கள் சம்பந்தமாகக் கட்டிவிடப்பட்டுள்ள கதைகளிலே மலிந்து கிடக்கும் பொய்யும் புரட்டும் பிய்த்துக் காட்டப்பட்டன.

புரோகிதத் திருமணத்திலே, அக்னி பகவானைச் சாட்சியாக! 'பிரதிஷ்டை' செய்கிறார்கள், ஆனால் புராணத்திலே, அக்கினி பகவானைப்பற்றிக் கூறப்பட்டுள்ள கதைகளைப் பார்த்தால்தானே தெரியும்—அவ்வளவு அக்ரமம் ஆபாசம் இருக்கிறது, என்று பேசித் தோழர் கோவிந்தசாமி சுயமரியாதைச் சூறுவளியையே சட்டசபையிலே சிறிது காட்டினார்.

இவை, சாதாரண சம்பவமல்ல, சகலரும் செய்துவிடக் கூடியது மல்ல.

பகுத்தறிவு நாட்டிலே பரவி இருக்குமளவு, நாடாள்வோரின் கூடங்களிலே நுழையவில்லை, திராவிட சட்டசபைக் கட்சி இக்குறையைப் போக்க முனைந்திருக்கிறது. வரவேற்கிறோம்.

அதுபோலவே, வாய்ப்புக்கிடைக்கும்போதெல்லாம் 'திராவிட நாடு' பிரச்சினையையும் நண்பர்கள் விளக்கிக்கொண்டு வருகிறார்கள். அது காங்கிரஸ் தோழர்களுக்குத் தெளிவைத் தருகிறது, ஒப்பந்தத்தை ஒரு சிறு காகிதத் துண்டு என்று கருதி ஓடிவிட்ட பெரியவர்களுக்கு வெட்கம் விலாவை வேலெனக் குத்துகிறது; நாட்டுக்கு திராவிட நாடு பிரச்சினை வளர்ந்து வரும் வகையைக் காட்டுகிறது.

சென்றகிழமை தோழர் கோவிந்தசாமி, மொழிவழி மாகாணம்பற்றிப் பேசும்போது 'திராவிட நாடு' குறித்துப் பேசினார், மதியும் நிதியும் ஒருசேர ஒப்படைக்கப்பட்டிருக்கும்—இலாகா அளவில்! — கனம் சுப்ரமணியனார், இதென்ன தனிக் குரல் என்று கேலி பேசினார்.

இரண்டுநாள் கழித்துக் கைத்தறியாளர் பிரச்சினைபற்றிப் பேசிய தோழர் டி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், திராவிட நாடு பற்றி ஆதரித்துப் பேசியதுடன், 'கனம்' கூறிய கேலிப் பேச்சின் மண்டையிலடிப்பதுபோல, தோழர் கோவிந்தசாமியின் பேச்சுத் தனிக்குரல் அல்ல! இதோ நாங்கள் அனைவரும் திராவிட நாடு ஆதரவாளர்கள்தாம் — என்று முழக்கமிட்டார்.

நாங்கள் யாவரும், என்று நண்பர் கூறி, திராவிட சட்ட சபைக் கட்சியை மட்டுமே காட்டியிருப்பார் என்று கருதுகிறோம். மறு வாய்ப்புக் கிடைக்கும்போது அவர், பொதுநலக் கட்சியையும் உழைப்பாளர் கட்சியையும் கூடக் காட்டலாம்—நாம் அதனை மறக்கவில்லை, அவர்கள் மறந்ததால் இலாபம் பெற்றார்கள்!!

அடிக்கடி, ஆனால் வீணில் நுழைப்பது போலன்றி, நமது நண்பர்கள், சட்டசபையிலே திராவிட நாடு குறித்துப் பேசிவருகிறார்கள்.

அது பலனளிக்காமலா போகும்! இலங்கை—இந்தியா ஒப்பந்தத்தைப் பற்றிப் பேசும் போது, காங்கிரஸ் உறுப்பினர்களே வடநாடு, தென்னாடு, என்று பேசத் தொடங்கினர்!! ஆம்! திராவிட சட்டசபைக் கட்சி மாற்றுக் கட்சி முகாமுக்குள் நமது கருத்தைப் புகுத்தும் மகத்தான தொண்டாற்ற அருமையான வாய்ப்பைப் பெற்றிருக்கிறது.

சட்டசபையில் நிச்சயமாக நாம் இருக்கிறோம் — நமது கருத்து கமழ்கிறது. வளர்க மணம்!

2-ம் பக்கத் தொடர்ச்சி

பட்டாபிராமன் இந்தி விஷயத்தில் கூறியதுபோல, நூறு வருஷமானாலும் நம்முடைய குறிக்கோளின் வலிவையும் பொலிவையும் அறிய முடியாது, இவர்களால் என்று கூறிவிடமுடியாது. உண்மையை மறுக்காதும்—மறைக்காதும் ஒப்புக்கொள்ளும் அந்த அருமையான ஆற்றலைப் பெற்றுவிட்டால், யாரும் நம்முடைய இந்த நியாயமான கோரிக்கையை மறுக்கார் என்பது உறுதி.

இந்திய அரசியல் சட்டம், இந்திதான் இந்நாட்டின் பொது மொழி என்பதை ஒப்புக்கொண்டுவிட்டதாம்! எனவே அதனைப் பொது மொழியாக்குவதில்தான் ஒவ்வொருவரும் தத்தம் கடமையைச் செய்ய வேண்டுமாம்!

ஆனால், இந்திய அரசியல் சட்டத்தின் அதிகார கர்த்தாவான பண்டித நேரு, "இந்திதான், அரசாங்க மொழி என்று அரசியல் சட்டம் ஒத்துக்கொண்டிருப்பதாலேயே, அது தேசிய மொழி ஆகிவிடமுடியாது இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு மொழியும் இந்தத் தேசத்தின் தேசிய மொழிதான்" என்று அந்தக் கம்யூனிஸ்டுத் தோழரைப்பார்த்து இடித்துரைப்பதுபோல் பதில்கூறியிருக்கிறார். இதனை இந்திமொழியில்கம்யூனிசத்தைக் காணத் துடித்து நிற்கும் தோழர்கள் மஜூம்தார் உட்பட அனைவரும் உணர வேண்டுகிறோம்.

திராவிட நாடு பற்றி சங்கராச்சாரியார்

"நமது நாடு 56 தேசம் கொண்டது என்று சொல்லுவார்கள். நர்மதைக்கு வடக்கே இருப்பதை கௌட தேசம் என்றும், அதற்குத் தெற்கே இருப்பதை திராவிட தேசம் என்றும் கூறுவர்."

ஜகத்குரு சங்கராச்சாரியார்.
காஞ்சி மே 6.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

—அருளாவது ஐஸ்வரியம் தருவதாவது—என்று பேசி, மதத்தை மடைமை என்றும், புராணத்தைப் புரட்டு என்றும், இதிகாசத்தை இழிவுப் பெட்டகமென்றும், சடங்குகளை மூட நம்பிக்கை என்றும், சாஸ்திரங்களைச் சூழ்ச்சிகளென்றும் பேசித் திரியும், புதுயுக ராட்சதர்களான, சுயமரியாதைக்காரர்களின் எதிர்ப்பு என்னை இழி நிலைக்குக் கொண்டுவந்ததுபோதும், அந்த ஆசாமிகள், சமயபுரத்தம்மையை நம்பி சக்கையாகாதே! உழைத்து உழைத்துப் பெற்ற பணத்தை ஊதாரித்தனத்துக்குச் செலவிடாதே! நடமாடும் கோயிலுக்குப் பூஜைசெய், நயவஞ்சகர் காட்டும் பாதையில் செல்லாதே, என்று சண்டமாருதப் பிரசாரம்செய்து, என் பக்தர்களின் மனதைக்கலைத்து என் செல்வாக்கைக் கெடுத்து வருகிறார்கள்போதும், என்று எண்ணி, இதுதானு அம்மே! இன்றே ஒரு தடை உத்திரவுபோட்டு அந்தத் தான்தோன்றிகளைத் தாக்கித் தகர்த்துவிடுகிறோம். தாயே! அவர்களுடைய பேச்சு, எழுத்து, பாட்டு, கூத்து, எதையும் நாட்டிலே பரவாதபடி, 'வேலி' கட்டுகிறோம், விசாரத்தை விடு, என்று எனக்கு ஆறுதல் கூற முன்வராதீர்கள், ஐயன்மீர்! எனக்குவந்துவிட்ட இடியும் இழிவும் சுயமரியாதைக்காரர்களால் ஏற்படவில்லை. எல்லாம் நம்மவர்கள் செய்கிற காரியமேதான். எனக்கு நாசம் விளைவிக்கும் பேர் வழிகள், பக்தி குறைந்தவர்களல்ல, பரமன் எங்கு இருக்கிறார் என்று கேட்பவர்களல்ல, பாடுபடாமல் வாழ எண்ணுபவன் பாமரரை ஏய்க்கக்கட்டிவிட்ட பொய்யும் புரட்டும்தான் புராண இதிகாசம் என்று பேசுபவர்களல்ல—எல்லாம் பக்தர்களால் வந்தவினைதானய்யா, பக்தர்களால் வந்தவினைதான்!!

எவ்வளவோ கோலாகலமாக இருந்துவரும் எனக்கு மானநஷ்டம் ஏற்படும் விதமான செயல் பகிரங்கமாக நடைபெறுகிறது.

என் மகிமையைக் குறைத்து, என் புகழுக்குக் களங்கம் தேடும் காரியம் நடைபெறுகிறது. வெகு அருகாமையில், மிக ஜரூராக.

சமயபுரத்துக்குச் சிலகல் தொலைவிலே ஒரு பட்டிக்காடு — யாரும் அதன் பெயரைக் கேட்டிருக்கமாட்டார்கள் — ஒரு முக்கியத்துவமும் கிடையாது — இப்போதோ அதன் பெயர், பிரக்யாதியாகிவிட்டது—சமயபுரமாகிவிட்டது என்று வைத்துக்கொள்ளுங்களேன், வயிறு எரிந்துதான் சொல்கிறேன்.

புறத்தாக்குடி என்பது அந்த குக்கிராமத்தின் பெயர். சேர்ந்தார்போல் நூறு பேரைக்கூடக் காண முடியாது அங்கு. அப்படிப்பட்ட இடம் இப்போது திமிலோகப்படுகிறது! இருபது முப்பது மைல் சுற்றளவுக்கும் உள்ள சிற்றூர் பேரூர்களிலிருந்து திரள் திரளாக மக்கள் சென்ற வண்ணமிருக்கிறார்கள். ஆணும் பெண்ணும், காய்ந்ததும் மினுக்கித் தெரிவதும், கால்நடையாகவும் காரிலும், கையில் காசுஉள்ளதும் வயிற்றுப்பசி கொண்டதும், பறட்டைத் தலையும் பகட்டு நடையும், எல்லா 'ரகமும்' புறத்தாக்குடி புறத்தாக்குடி!! என்று செல்வதைக் காண்கிறேன்.

ஆஹா! என்ன மகிமை, என்ன மகிமை! எப்படிப்பட்ட சக்தி! எப்படிப்பட்ட சக்தி! என்று பேசுகிறார்கள், என் காது குடைகிறது, கண் கசிகிறது.

கண் பார்வையைத் திரும்பப் பெற்றான்! கோர்ட்டில் வழக்கு ஜெயித்தது! குழந்தை, இருபது வருஷமாக இல்லாமலிருந்தவருக்குப் பிறந்தது, இத்தனைக்கும்புருஷனுக்குக் கொடிய குஷ்டநோய்கொல்லுகிறது! புதையல் கிடைத்தது, மேகம் பறந்தது, குஷ்டம் மறைந்தது! காலிழுப்பு கை வலிப்பு, எல்லாம் தீர்ந்தது என்று கதை கதையாகப் பேசுகிறார்கள்—புளுகுதான், ஆனால் அது இன்று பஞ்சாமிர்தமாகிவிட்டது.

என் கண் எதிரில், என் அரசு நடைபெறும் இடத்துக்கு அருகே, என் மகிமையை, அருளைப் போற்றிப் புகழ்ந்து, வாழ்த்தி வணங்கிக் கொண்டிருந்த அதே மக்கள், செச்சே! என்ன மதியீனம், எவ்வளவு மனக்குழப்பம், எத்துணை நன்றி கெட்டதனம், இப்போது அதே மக்கள், என்னை எவ்வளவு பக்தியுடன் நாடி வந்தார்களோ, அதேவிதமாக, புறத்தாக்குடி செல்கிறார்கள்! எங்கும் என் நாமமே நாதமாக இருந்து வந்தது; இன்றோ எங்கும், எவரும் புறத்தாக்குடி, என்று புகழ்பாடி ஆடுகிறார்கள். கண்டால், வேதனை எவ்வளவு ஏற்படும் எனக்கு!

யாரோ ஒரு சாமியாராம்—ஆயிரம் ஆயிரம் சாமியார்கள் என் அடி பணிந்து நான் இட்ட பிச்சையை உண்டு வாழ்ந்தார்கள்—அவனை ஒரு பூனைகடித்ததாம்; அவன் இறந்து போனானும்—அவனைச் சாகடித்த பூனையை ஒரு நாய் கடித்திருந்ததாம், அந்த நாய், வெறிபிடித்ததாம்—கதையைக் கேட்டாலே, கேவலம் தோன்றும்— வெறிபிடித்த நாயிலிருந்து கதை ஆரம்பமாகிறது. நாய் பூனையைக் கடிக்க, பூனை சாமியாரைக் கடிக்க, சாமியார் இறந்துபட, அந்தச் சாமியார் இறந்த இடத்திலே இருக்கும் 'சாம்பலை' எடுத்துப் பூசிக்கொண்டால் சகல சித்தியும் கிடைக்கிறது என்று நம்பிக்கொண்டு, துளியும் தெளிவு இல்லாமல் கும்பல் கும்பலாகப் புறத்தாக்குடி செல்கிறார்கள், இந்தப் பக்தர்கள்!!

ஒரு முக்கியமான—சர்க்கார் அவசரமாகக் கவனிக்க வேண்டிய தகவல் இதிலே தொக்கி இருக்கிறது—என் செல்வாக்கைச் சிதைக்கும் விதமாக முளைத்துள்ள இந்தப் புது புனிதஸ்தலத்துக்குக் காரணமாக இருந்த சாமியார் கிருஸ்தவர், இந்து அல்ல! உடனே இதைக் குறித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன். புறத்தாக்குடிக்குப் புற்றீசல் போலச் செல்பவர்கள், இந்துக்கள்—அங்கே இறந்து இன்று என்னை இம்சிக்கும் நிலையை உண்டாக்கிவிட்டவர், கிருஸ்தவர். இந்து மதம் நமது சொந்தமதம், புராதன

அமெரிக்க சாமான் வாங்காதே

உலக சமாதானத்துக்காக உழைப்பவர்கள் அமெரிக்க சாமான்களை வாங்கினால் உலகயுத்தம் ஏற்பட உதவி செய்தவர்களாவோம்.

குமரப்பா,
திருமங்கலம் மே 8.

மதம், மூவாதி தேவர்களால் தரப்பட்ட மூல மதம், அவதாரங்களைக் கொண்ட மதம், ஆழ்வாராதி நாயன்மார்களைக் கண்டமதம், ஆலயம் ஆயிரமாயிரம் கொண்டமதம், அப்படிப்பட்ட மதம் இருந்தும், அதிலே பிறந்து வளர்ந்தவர்கள், ஒரு கிருஸ்தவச் சாமியாரின் சாவிடத்தைப் புனித இடமாகக் கொண்டு, புறத்தாக்குடி செல்கிறார்கள், பொறுத்துக் கொள்ளக் கூடியதுதானா இது!

நல்லவேளை, அந்த நாயையும் பூனையையும் மறந்து விட்டார்கள் — சாம்பல் அளவோடு நிற்கிறார்கள்!!

என்னை நாடி, என் புகழ் பாடி, என் மகிமையைப் பேசி, என் செல்வாக்கு என்றும் அழியாதது என்று நான் பரிபூரணமாக நம்பும்படி இது நாள் வரையில் நடந்து கொண்டு வந்தவர்கள், இன்று ஏன் புது இடம் செல்கிறார்கள், புறத்தாக்குடி ஓடுகிறார்கள்.

“நல்ல டாக்டரை அழைத்து வந்து காட்டப் போகிறேன்” என்று வைத்யம் பார்த்துவரும் டாக்டரிடம் கூறினால், என்ன பொருள்? கேவலப் படுத்துவது தானே!

அழகான பெண் கிடைக்க வில்லையா? என்று நண்பனிடம் அவன் நண்பன் கேட்டால் என்ன பொருள், இருப்பவள் அவலட்சணம் என்பதுதானே!

சமயபுரத்தாள் நானிருக்க, சகலருக்கும் தாயாக நானிருக்க, வேண்டும் வரம் அருள நான் இருக்க, நெடுங்காலமாக நான் இருக்க, நேற்று முளைத்த இடத்துக்கு, மந்தை மந்தையாகச் செல்வதா! அக்ரமமல்லவா?

சமயபுரத்தாளைத் தொழுது வந்தோம், ஒரு பலனும் இல்லை; சகல சக்தியும் படைத்தவள் என்று நம்பினோம், ஒரு குறையும் தீரவில்லை, வீண்வேலை இந்தப் பூஜை, வெட்டிவேலை அங்கு செல்வது, கால் கடுப்பும் பொருள் இழப்பும்தான் கண்ட பலன், புறத்தாக்குடி என்ற ஊர் இடத்திலே புதுமை ஒன்று நடைபெறுகிறதாம், அங்கு காலமான சாமியாருடைய சாம்பல், சகல நோயையும் போக்கி, சகலமும் சித்திக்கும்படி செய்கிறதாம், இனி அங்கு செல்வோம், நமது குறையைத் தீர்த்துக் கொள்ள என்று எண்ணித்தானே இந்த மக்கள், அங்கு செல்கிறார்கள். என் மீது நம்பிக்கை இல்லை என்றுதானே பொருள்? என் மகிமை வெறும் கட்டுக்கதை, கவைக்கு உதவாது என்றுதானே அவர்கள் கூறாமற் கூறுகிறார்கள்! எப்படி இருக்கும் என் மனம், நீங்களே சொல்லுங்கள். என்னமோ கடவுள் விஷயம், நமக்கென்ன தெரியும் என்று சொல்லிவிடாதீர்கள். எனக்கு வந்த கஷ்டம் போல உங்களுக்கும் நாளை வரக்கூடும். ஆகவே சிந்தனை செய்யத்தான் வேண்டும்.

திருவல்லிக்கேணி கடற்கரையில் அலங்கார மேடை அமைத்து ஆயிரம் விளக்கு போட்டு, அன்பர்காள்! நண்பர்காள்! என்று நீவிர் பேச ஆரம்பித்த காலை, பதினாயிரக் கணக்கிலே கூடி இருந்த மக்கள், எங்கோ ஒரு மூலையில் எவனோ ஒருவன் அன்புசெழுமிய தோழர்களே! என்று பேசத் தொடங்கியதும், உங்கள் எதிரே இருந்த கூட்டம் எழுந்து அங்கு சென்றால், உங்களுக்கு உள்ளம் எப்படி இருக்கும்? கடல் பொங்கி இந்தக் கருத்தற்றவர்களை மூழ்கடிக்காதா, கடுங்காற்றுக்கிளம்பி, இதுகளின் கண்களிலே மணலை இறைத்து ஒழிக்காதா, என்றுகூட எண்ணுவீர்களல்லவா!

இப்போது எண்ணிப் பாருங்கள் புறத்தாக்குடி சம்பவம், என் மனதை என்ன பாடுபடுத்தி இருக்கும் என்பதை.

மானமே பறிபோகிறது, நான் வாழ்ந்துவந்த வாழ்வே நாசமாகிறது, என் கீர்த்தி கரைகிறது, செல்வாக்கு சிதைகிறது. புதிதாக முளைத்த இடம், புண்ய ஸ்தலமாம் என் சமயபுரத்தின் மகிமையைக் கெடுப்பதா, அதைச் சகித்துக் கொண்டு நானும் 'தேவி'யாக இருப்பதா! பக்தியின் மேம்பாடு தெரிந்தோரே! பழமையைப் போற்றும் சீலர்காள்! புராண காலத்தைப் பொற்காலம் என்று கூறும் புண்யர்காள்! இது என் பிரச்னை மட்டுமல்ல, நன்றாக எண்ணிப் பாருங்கள், இது பொதுப் பிரச்னை, நாம் அனைவரும் கூடிப் பேசிப் பரிகாரம் கண்டாக வேண்டிய, சிக்கலான பிரச்னை.

புது இடம் தேடுகிறார்கள் என்றால், பழய இடத்திலே நம்பிக்கை நசித்துவிட்டது என்றுதானே பொருள்—இவ்வளவு காலமாக ஏமாந்தார்கள் என்பதுதானே இதன் பொருள்—என்று பேசுகிறார்கள்—அவர்கள்தானய்யா, ச. ம.க்காரர்கள்.

இது எத்தனை நாளைக்கோ? இன்னொன்று முளைக்கும் வரையிலும்! என்று ஏளனம் செய்கிறார்கள்.

அவ்வளவும் புரட்டு, ஒவ்வொன்றாக அம்பலமாகிறது என்று இடித்துரைக்கிறார்கள்!

எது அப்பா! மகிமை மிகுந்த இடம், சமயபுரமா? புறத்தாக்குடியா? என்று கேட்டுக் கேலிபேசுகிறார்கள்.

உண்மையான பக்தியும் கடவுள் நம்பிக்கையும் கொண்டவர்கள் இப்படியா சட்டை. மாற்றுவதுபோல தொழுகை இடத்தை மாற்றிக் கொண்டிருப்பார்கள்? தெளிவு இருந்தால், இவ்வளவு காலத்துக்குப் பிறகா சமயபுரம் இவ்வளவு தான் என்ற புத்தி பிறக்கும்!—என்றெல்லாம் பேசுகிறார்கள்.

வீணாக அவர்கள்மீது கோபித்துக்கொண்டு பயன் இல்லையே! நானிருக்க, இன்னொரு அற்புதவான் கிளம்பலாமா? இப்படிப் போட்டியும் பொறாமையும், பொச்சரிப்பும் பூசலும் இருந்தால், அவ்வளவும் புரட்டு என்றுதானே, அவர்கள் பேசுவார்கள்.

ஆகவே, ஐயன்மீர்! என் செல்வாக்கைச் சிதைத்து, மதிப்பைக்

இலட்சணம்!

“சாராயம் காய்ச்சுவது சிலஇடங்களில் குடிசைத் தொழிலாக நடந்து வருகிறது”

முன்னாள் முதலமைச்சர்,
ஓமந்தூரார்.
திருமங்கலம் மே 8.

குலைத்து, மகிமையைப் பழித்து, மதத்தின்மீதே மக்களுக்குச் சந்தேகம் பிறக்கும் விதமாக, புறத்தாக்குடி நடைபெறுவதால், மதத்தைக் காப்பாற்றவும், என் மகிமையைப் பாதுகாக்கவும், உடனே, ஒரு தடை உத்திரவு பிறப்பித்து, புறத்தாக்குடியை மூடிவிடவேண்டும். இல்லையானால் எனக்கும் இழிவு, உங்களுக்கும் கேவலம்.

உற்பத்தியைப் பெருக்கு என்பது இன்றைய சர்க்காரின் கொள்கை. வேறு எதிலே உற்பத்தியைப் பெருக்க முடியாவிட்டாலும், புண்யஸ்தல உற்பத்தியையாவது பெருக்குவது சரிதானே, என்று நம்மவர் சிலர், விஷயமறியாமல் வாதாடுகிறார்களாம்.

இந்தத் துறையில் உற்பத்தி பெருகப் பெருக, ஏற்கனவே உள்ளவைகளின் மதிப்பு மடிகிறது என்று பொருள், மொத்தத்திலே இந்தத் துறையின் மதிப்பே கெடும்.

மேலும், புறத்தாக்குடிக்குக் காரணம், கிருஸ்தவர் அதனை மறவாதீர்! சத்யமேவஜெயதி! ரகுபதி ராகவ ராஜாராம்! இவைநமது மந்திரங்கள், கவனமிருக்கட்டும்.

நிலைமையின் நெருக்கடியையும், பிரச்சினையின் பயங்கரத்தையும் உணர்ந்து உடனடியாகநடவடிக்கை எடுக்காவிட்டால், புறத்தாக்குடியானும், அவனுக்கு உடந்தையாக நீங்களும் இருந்துகொண்டு என் மானத்தைக் கெடுக்கிறீர்கள் என்று குற்றம் சாட்டி, மானநஷ்ட வழக்குத் தொடுக்கத் தீர்மானித்துவிட்டேன். பூஜாரி, வெற்றி என்பக்கம் நிச்சயமாக இருக்கும் என்று உறுதி அளிக்கிறான். எனக்கேகூடத் தெரியும், என் சன்னதிக்கு எத்தனையோ ஜட்ஜுகள் வந்து போயிருக்கிறார்கள்.

என்னமோ எழுதினேன் என்று பராமுகமாக இருக்க வேண்டாம்; உடனே பரிகாரம் தேடித்தரவும்.

இங்ஙனம்,

பல்காலமாக மகிமையுடன்

வாழ்ந்துவரும்

சமயபுரத்தம்மை.

*குறிப்பு:— அரசியல் காரியம் அதிகமாக இருக்கிறது என்று சாக்குக் கூறி விடாதீர்கள், நமது அரசியலே, மதத்தின் மீது கட்டப்பட்டிருக்கிறது என்பதை உங்களுக்குக் கவனப்படுத்துகிறேன். மேலும் இப்போது, காங்கிரசை எதிர்த்த உழைப்பாளி கட்சி போன்றவைகளைக்கூட, பதவி கொடுத்துச் சரிப்படுத்தி விட்டதால், சர்க்காருக்கு, தொல்லையே கிடையாது என்று பூஜாரி கூறுகிறான். புதிய மந்திரி பக்திமானும்—இங்கே வருகிறாரோ, புறத்தாக்குடி போகிறாரோ, தெரியவில்லை. என் விஷயத்தை உடனே கவனித்து ஆவன செய்யவும்.

சமயம்மை.

★

[திருச்சி, மே 2-தங்கள் தீராத நோய்கள் தீருமென்ற நம்பிக்கையில் நூற்றுக்கணக்கான நோயாளிகள் இங்கிருந்து 12-மைல் தூரத்திலுள்ள புறத்தகுடி கிராமத்துக்கு வந்தவண்ணமிருக்கின்றனர்.

திருச்சி-சென்னை பிரதான சாலையில் புறத்தகுடி இருக்கிறது. அங்கு வாழ்வோர் பெரும்பாலும் ரோமன் கத்தோலிக்கர்கள். ஹிந்துக்கோயில் மாதிரி நூறு வருஷத்துக்கு முன் கட்டப்பட்ட ஒரு மாதாகோயில் அவ்வூரில் இருக்கிறது. மாதா கோயிலை ஒட்டியுள்ள மயானத்தில் பல வருஷங்களுக்கு முன், அருகிலுள்ள இருங்கலூர் கிராமத்தில் வசித்த பூஜ்யர் முடியப்பர் அடக்கம் செய்யப்பட்டார்.

கடந்தசில தினங்களாகப்பெரும்பாலும் ஹிந்து முஸ்லிம் பெண்கள் உள்பட ஏராளமான நோயாளிகள் மாதாகோயிலுக்கு வந்தவண்ணமிருக்கின்றனர். நோயாளிகளில் பலர் துர்த்தேவதைகளால் பிடிக்கப்பட்டவர்களாம்.

அடைப்புள்ள ஒரு இடத்தில், நோயாளிகள் உட்கார வைக்கப்படுகின்றனர். கொஞ்ச நேரம் கழித்து அவர்கள் வெளியே வருகின்றனர். அவர்களைப் பிடித்துக்கொண்டுள்ள துர்த் தேவதைகள் பறந்துவிடுவதாகக் கூறியதாக நோயாளிகள் தெரிவிக்கின்றனர். தேவதை போய்விடுவதாகக் கூறியது பற்றி மூன்று முறை பிரமாணம் செய்யுமாறு நோயாளிகளிடம் மாதா கோயிலைச் சேர்ந்தவர்கள் கையில் தீச்சட்டி வைத்துக்கொண்டு கேட்கின்றனர்.

பின், நோயாளி அருகிலுள்ள பனந்தோப்புக்கு ஓடி, அங்குள்ள மரத்தில் தலையால் முட்டுகிறார். கோயிலைச் சேர்ந்தவர் நோயாளியின் தலை உரோமத்தைக் கொஞ்சம் கத்தரித்து மரத்தில் கட்டுகிறார். இத்துடன் சிகிச்சை முடிகிறது. துர்த்தேவதை நோயாளியை விட்டு நீங்கிவிட்டதாகக் கருதப்படுகிறது.

குஷ்டம், பார்வைக் குறைவு போன்ற நோயுள்ளவர்களும் இங்கு வருகின்றனர்.

எனினும் சிகிச்சை உண்மையானதுதான் என யாரும் உத்தரவாதமளிக்க முன்வரவில்லை. ஆனால் ஜனங்கள் பெருவாரியாக வந்தவண்ணமிருக்கின்றனர். இதனால், போக்குவரத்து, சுகாதாரப் பிரச்னைகள் வேறு தோன்றியுள்ளன.

—தினமணி 5—5—54]

★

அறிவிப்பு

"பொன்னொளி" "பவழ பஸ்பம்" என்ற இரண்டு நூல்களின் விற்பனை உரிமை கீழ்க்குறிப்பிடும் விலாசத்தாருக்கு அளிக்கப்பட்டு விட்டதால், மேற்படி புத்தகங்கள் தேவைப்படுவோர் பரிமளம் பதிப்பகத்துக்கு எழுதாமல், இனிமேல் கீழ்க்கண்ட முகவரிக்கே எழுதிப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பரிமளம் பதிப்பகத்தார்

புத்தகங்கள் கிடைக்குமிடம்:—

G. N. சாமி,
183, மவுண்ட்ரோட்,
சென்னை-2

4-ம் பக்கத் தொடர்ச்சி

விட்டுவிட்டுத்தன்வேலையைப்பார்க்க போய்விடுவாள்.

அன்றைக்கு அவ்வளவு விடியற் காலையிலே ஆறுமுகம் குழாயடிக்கு வரவும் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவன் அருகில் வந்ததும் "எங்கே போறே. இந்த நேரத்திலேயே குளிக்க வந்திட்டே?" என்றாள்.

ஆறுமுகம் பேசாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன சும்மா முறைச்சா...... விஷயத்தைச் சொல்லேன்!" என்றாள் பொன்னி.

ஆறுமுகத்திற்கு பதில் கூறும் எண்ணமில்லை.

"சரிதாண்டி போடி சீக்கிரம்!!' என்று கூறியவண்ணம் குழாயருகில் சென்றான்.

"ஐயே......காலங்காத்தாலே கடுக்கா சாப்பிட்டியா......சில் லின்னு விழுறியே!" என்று கூறிக் கொண்டே முகத்தை ஒருதிருப்புத் திருப்பி, குனிந்து பானையைத் தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

அந்த நேரத்திலே அவள்போட்ட நடையும், அவள் இறுகிய உடல் அள்ளித்தெளித்த வசீகரமும் தனி அழகாய் இருந்தது. ஆனால் அதை ரசிக்கத்தெரிந்தவனா ஆறுமுகம்? கண்ணை மூடிக்கொண்டு குழாயில் உட்கார்ந்தான். சலசலவென்று தண்ணீர் விழுந்தவுடன் ஓ! ஆ!! என்று குதூகலக்கூச்சல் போட்டவண்ணம் திரும்பினான், பொன்னி குடிசைக்கு போய்க்கொண்டிருந்தாள்.

"ஏய், பொன்னி!" என்று கூப்பிட்டான். ஆறுமுகம் தன் சுபாவத்தைவிட்டு அன்பாக அழைத்த பின் அவள் அவனருகில் ஓடிவராமல் என்ன செய்வாள்?

"என்ன வேணும்?" என்று ஊடல் பாணியில் கேட்டாள்.

"ஒன்னுமில்லே...... இன்றைக்கு நான் வேலைக்குப் போறேன்...... அதுக்குத்தான் இவ்வளவு காலையிலேயே குளிக்கவந்துவிட்டேன்!" —என்றான்.

"நீயா...நிஜமானுமா...? என்று ஆவலோடு கேட்டாள் பொன்னி.

"நான்தாண்டி! பின்னே பொய்யா சொல்றேன். ஆலைக்காரர் வீட்டுக்கு டிரைவர் வேலைக்குப் போகிறேன்! என்றான், ஆறுமுகம்

"அப்படின்னா, இனிமேல் மாசச் சம்பளம் வாங்குவே!" என்று ஆசையோடு கூறினாள் அவள்.

"பின்னே...சாயந்திரம் வரேன், பாருடி, ஒரே காக்கி டிரஸ்ஸா இருக்கும்! என்றான்.

"சீக்கிரமா வந்துடு!" என்றுகூறி விட்டுப்பெருமிதத்தோடுஉடலைஎழு வளைவாக வளைத்து ஓடிவிட்டாள் பொன்னி. ஆறுமுகம் குளித்து விட்டுக் குடிசை வந்து சேர்ந்தான்.

குளித்துவிட்டு வந்த தன்மகனைக் கண்ட அஞ்சலை ஆவலோடு "இந்தாடா...இந்த கஞ்சித் தண்ணியைக் குடித்துவிட்டுப் போ. அங்கே போய் வேலை செய்யத் தெம்பு வேணும், என்று கூறிக் கொண்டே கஞ்சிக் கலயத்தைக் கொண்டு வந்து அவனருகில் வைத்துவிட்டுப் போனாள்.

ஆறுமுகம் ஈரவேட்டியையே கட்டிக்கொண்டு, பல நாட்களாக அவனுக்கென்று இருக்கும் ஒரே புஷ்கோட்டை எடுத்துப் போட்டுக் கொண்டு கஞ்சிக் கலயத்தினருகில் வந்து உட்கார்ந்தான்.

எதிரில் இன்னும் செங்கமலம் தூங்கிக்கொண்டிருந்தாள். சிறிது நேரம் அவளையே பார்த்தான். பிறகு ஏதோ தோன்றியது. திடீரென்று எழுந்து அவளருகில் சென்றான்.

உலகமே தெரியாத நிலையில் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள் செங்கமலம்.

அவள் தலைமாட்டில் தடவிப் பார்த்தான். பழந்துணிகளைத் தவிர வேறெதுவுமில்லை.

கீழேயுமில்லை. கிழிந்தமுந்தானியின் மேல்தான் அவள் படுத்திருந்தாள்.

மெதுவாக அந்த முந்தானியை இழுத்தான். ஆஹா! அந்த முந்தலைப்பின் முனையில் முடிச்சுப் போட்டு வைக்கப்பட்டிருந்தது அவன் தேடிய பணம். அவளுடைய இடுப்பு அந்த முடிச்சின்மேல் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தது. மெதுவாக இழுத்தான். காரியம் பலிப்பதாயில்லை. இதற்குள் அவன் தாய் வரும் சப்தம் கேட்டது. உடனே அவனுக்கு செய்ய வேண்டிய காரியத்திற்கு நேரம் மிகக் கொஞ்சம்தான் என்பது தெரிந்தது. ஆறுமுகத்தின் பொறுமை எல்லையைத் தாண்டி விட்டது. சட்டென்றுமுந்தானையை இழுத்து அந்த முடிச்சை கைப்பற்றினான். அதே வினாடியில் செங்கமலமும் திடுக்கிட்டு எழுந்தாள். ஆறுமுகத்தின் கையில் முடிச்சைப் பார்த்துவிட்டாள்.

'ஐயோ, அம்மா! இங்கேபாரேன் இந்த குரங்கை! ஐயோ, என் காசை ஏன் எடுக்கிறே! அம்மா! அம்மா!!" என்று கத்திக்கொண்டே அவனருகில் ஓடினாள்.

ஆறுமுகம் இதற்கெல்லாம் பயந்தவனா? "சரிதாண்டி போடி!" என்று கூறிக்கொண்டே முந்தானையைக் கையில் பற்றிக்கொண்டே குடிசைக்கு வெளியே ஓடிவந்துவிட்டான்! செங்கமலம் நிர்வாணமாக் கப்பட்டாள்! உள்ளே "அம்மா! அம்மா!" என்று கத்திக்கொண்டு நிற்பதைத் தவிர செங்கமலம் வேறென்ன செய்வாள்?

இரண்டு நிமிடங்களுக்குள் முடிச்சை அவிழ்த்து அதிலிருந்து காசை எடுத்தான் ஆறுமுகம்.

"சீ, கழுதை! இந்த எட்டணா காசுக்கா இந்தக்கூச்சல் போட்டே" என்று திட்டியவண்ணம் புடவையைத் தூக்கி உள்ளே எறிந்துவிட்டு புறப்பட்டான்.

இதற்குள் அஞ்சலை வந்தாள்.

"ஏண்டி, இப்படிச்சத்தம் போடுகிறே" என்று கேட்டுக்கொண்டே வந்தவள் ஆறுமுகம் போவதைப் பார்த்தவுடன், "இந்தாடா. உங்கப்பா பேரைச் சொல்லுடா. அப்பதான் மானேஜருக்கு உன்னை நல்லா அடையாளம் தெரியும்!" என்று கத்தினாள்.

ஆறுமுகம் அவள் கூறியதைக் கேட்டுக் கொண்டவன் போலத் திரும்பிப்பார்த்துவிட்டு வேகப்

போனான். இதற்குள் புடவையைக் கட்டிக் கொண்டு வெளியே வந்த செங்கமலம் "டேய், அண்ணே!" என்று கத்திக் கொண்டு, அவன் பின்னே ஓடத்துடித்தாள். இதைக் கண்ட அஞ்சலைக்குக் கோபம்தாங்க முடியவில்லை. "ஏண்டி அவனைக் கூப்பிடறே, இத்தனை நாளைக்குப் பிறகுஇன்னைக்குத்தான், ஒரு வேலையென்று அவன் போறான், அதுக்குள்ளே நீயே கூப்பிடு! போடி கழுதே! உள்ளேபோ!!" என்றாள். முணுமுணுத்துக் கொண்டே உள்ளேபோய் "குரங்கு! குரங்கு!!" என்று கத்திய வண்ணம் மறுபடியும் படுத்துக் கொண்டாள் செங்கமலம்.

குடிசைகளைத் தாண்டி மெயின் ரோடுக்கு வந்தான் ஆறுமுகம்.

அந்த 'சேரி' ஆரம்பிக்கும் அடையாளமாக அந்த இடத்திலே, 'உத்தமநாதபுரம்' என்ற கார்ப்பரேஷன் போர்ட் தொங்கிக்கொண்டிருந்தது.

அந்த மெயின் ரோடுக்கு வந்தால் பட்டணத்தின் ஒரு பகுதியில் உத்தமநாதபுரம் இருக்கிறது என்று நன்கு தெரியும். ஆனால் உள்ளே சென்றால் உத்தமநாதபுரம் உத்தமர்கள் அற்றது மாத்திரமல்ல; இன்னும் எவ்வளவோ உத்தமர்கள் தேவை அந்தச்சேரியை சீர்திருத்த என்பது புலப்படும்.

சாக்கடைகளுக்கும், சகதிகளுக்கும் இடையேவாழ்க்கையின் அடித்தளத்திலே வாழ்வைச் சாவுக்கு அழைத்துச் சென்றுகொண்டிருந்த வறுமையாளர்கள் குடிசை கட்டி வாழ்ந்துவந்தனர் அங்கே. ரோடு மேல் நின்று பார்த்தால் உத்தமநாதபுரம் பள்ளத்திலே இருப்பது நன்கு தெரியும், அந்தப் பழங்குடிசைகளின் முழுக் காட்சியையும் காணலாம். ரோடிற்கு வந்த ஆறுமுகம் பின் பக்கம் திரும்பி உத்தமநாதபுரத்தை ஒரு பார்வை பார்த்தான்.

அவன் வாழும் இடம் அவனுக்கே ஒரே அசுத்தமாகத் தெரிந்தது. பல குடிசைகளில் ஓலைகள் மடிந்து பிய்ந்துபோய் நிற்பது அந்த குடிசைகள் எவ்வளவு பழையகாலத்திலிருந்து காப்பாற்றப்பட்டிருக்கின்றன என்பதைக் காட்டின. ஆறுமுகம் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டான். சாதாரணமாக அவன் சிந்திப்பதே இல்லை. சிந்திப்பதற்கு அவனுக்கு விஷயமும், சந்தர்ப்பமும் ஏற்பட்டதே இல்லை.

அன்றைக்கு ஏனோ அவனையும் அறியாமல் அவன் மனம் சிந்திக்க ஆரம்பித்தது.

சிறுவயதிலே அவன், தன் தந்தை மாரியோடு ஆலைமுதலாளி உத்தமநாதருடைய பங்களாத் தோட்டத்திற்குத் தண்ணீர் ஊற்றியதுதான் முதலில் அவன் ஞாபகத்திற்குவந்தது.

அந்தக் காலத்திலே அவனுக்கு பட்டணத்தின் பல பாகங்கள் தெரியாது. ஒரு கோவணம் கட்டிக் கொண்டு மாரியோடு செல்வான். பங்களாவிலே மாரி தண்ணீர் இறைத்துத் தொட்டியில் ஊற்றுவான். அவன் அதை வாளியில் தூக்கிக் கொண்டுபோய்ச் செடிகளுக்கு ஊற்றுவான்.

ஆனால் இந்தத்தோட்டவேலையை ஆறுமுகம் கற்றுக்கொள்ளும் முன்னமேயே மாரி திடீரென்று இறந்தான். பிறகு ஆறுமுகத்திற்கும் தோட்டப்பயிற்சி போயிற்று.

"நீ, ரொம்ப சின்னவண்டா. தண்ணி தூக்கி, இறைச்சு ஊத்த எல்லாம் உன்னாலே முடியாது" என்று கூறி எஸ்டேட் மானேஜர் அவனைச் சீட்டுக்கிழித்தார்.

புதிதாக அமர்த்தப்பட்ட தோட்டக்காரக் குப்பன் ஆறுமுகத்தை உதவிக்கு வைத்துக்கொள்ளப்பிரியப்படவில்லை. குப்பனுக்கு அவன் தம்பி சடையன் கிடைத்தான். ஆகவே ஆறுமுகம் என்ன கெஞ்சியும் குப்பன்மனம் இளகவில்லை. அஞ்சலை கூடக் குப்பனைக் கெஞ்சினாள். மானேஜரைக்கேட்டுக் கொண்டாள். எதுவும்பலனில்லை ஆறுமுகத்துக்கு குப்பன்மேல் அடங்கா ஆத்திரம் ஆனாலும் என்ன செய்வது?

கோசாமல்தாயும்மகனும்சேரிக்கே வந்து விட்டனர்.

இதற்குப் பின்தான் ஆறுமுகத்தின் வாழ்க்கையிலேயே பெரியதொரு மாற்றம் ஏற்பட்டது.

கூலி வேலை தேடி அலைந்தான் ஆறுமுகம். கால் கடுத்ததுதான் மிச்சம்!

விரக்தியை மாற்ற நண்பர்களோடு சேர்ந்து வாழ எண்ணினான். சூதாட்டம் பழகியதுதான் மிச்சம்!

இன்பம் தேடிப் பொன்னியை நாடினான். ஆனால் பணமில்லையென்றால் இன்பம் இல்லை என்பதைக் கண்டான்.

அவனுக்கிருந்த குறுகிய சந்தர்ப்பங்களிலும், கொஞ்ச நாட்களில் அவனடைந்த அனுபவங்கள், சேரியில் அவனோடு வாழும் மக்கள் மக்களாக வாழவில்லை என்பதை அவனுக்குத் தெரிவித்தன. இந்தப் பராரி வாழ்க்கையிலிருந்து மீள அவனுக்கு வழி தெரியவில்லை. உலகமே அவனுக்குத் தெரிந்ததெல்லாம் பட்டணம்தான். அதிலே பிக்பாக்கெட் அடிப்பது ஆபத்தானது என்பதை உணர்ந்திருந்தான்.

எங்கேயோ வேலை தேடிக்கடைசியில் ஒரு கார் ஷெட்டில் கார் துடைக்கும் வேலையைப் பெற்றான்!

வெளியூரிலிருந்து பஸ் வந்து நின்றவுடன் கையில் துணியை எடுத்துக் கொண்டு ஓடுவான் ஆறுமுகம்.

'டேய், சின்னபயலே! போய் ஒரு டீ வாங்கிக் கொண்டு வாடா! என்று கூறிவிட்டு ஷெட்டிலே ஒரு மூலையில் உட்காருவான் டிரைவர் கந்தசாமி.

பக்கத்திலே இருந்த நாயர் கடையிலே போய் "ஞானம்பிகா பஸ் சர்வீஸ்" கணக்கிலே ஒரு டீ கொடுப்பா டிரைவர் கேட்கிறார்" என்று கூறி ஒரு கிளாஸ் டீயை வாங்கிக்கொண்டு வந்து கந்தசாமியிடம் கொடுத்து விட்டுப் பல மைல் பிரயாணத்தால் தூசி படிந்து நிற்கும் பஸ்ஸைத் துடைக்கப் போய் விடுவான் ஆறுமுகம்.

சீட்டெல்லாம் தட்டி, பக்கமெல்லாம் நன்கு துடைத்து, பின் ஒரு வாளி தண்ணீர் ஊற்றி டயர்களையெல்லாம் கழுவி அரை மணிக்குள் காரை மறு பயணத்திற்குத் தயார் செய்துவிடுவான் ஆறுமுகம்.

சிறிது கண்ணயர்ந்து எழுந்து வந்த டிரைவர் கந்தசாமி காருக்கு

மெருகு கொடுத்த ஆறுமுகத்தைப் பாராட்டத் தவறுவதில்லை.

"பெட்ரோல் எவ்வளவு இருக்குன்னு பார்ரா!" என்று கூறிக்கொண்டே ஏறி உட்காருவான். ஆறுமுகம் வழக்கப்படி ஒரு கம்பியை எடுத்துக் கொண்டு போய் பெட்ரோல் டாங்கிலே வைத்துப்பார்த்து விட்டு 'அரை காலன் இருக்கு அண்ணே!" என்பான்.

"சரி, சரி! போடுசத்தம், போகும் போது பெட்ரோல்புடிச்சுக்கிறேன்' என்பான் கந்தசாமி.

உடனே ஆறுமுகம் வழக்கமான பல்லவியை ஆரம்பிப்பான்.

"கிண்டி, தாம்பரம், செங்கல்பட்டு வாலாஜாபாத், காஞ்சிபுரம்!" ......இவன் குரல் கேட்ட சிறிது நேரத்தில் கொஞ்சம் கொஞ்சமாகப் பிரயாணிகள் பஸ்ஸில் ஏறுவர். அரைமணியில் பஸ் புறப்பட்டு விடும். போகும் போது சின்னப் பயலுக்கு இரண்டணா, கொடுப்பா!" என்பான் டிரைவர் கந்தசாமி.

கண்டக்டரும் "இந்தாடலே!" என்று இரண்டணாவை தூக்கிப் போட்டு விட்டு செல்வான். மறுபடியும் வேறு பஸ் வரக் கிட்டத்தட்ட ஒரு மணியாகும். அதுவரை ஆறுமுகத்திற்கு இந்த இரண்டணா தான் துணை. பக்கத்து நாயர் கடையிலே ஒரு கப் டீ சாப்பிட்டு ஒருகட்டு பீடி வாங்கிக் கொண்டு, ஷெட்டின் மூலையில் போய் உட்கார்ந்து விடுவான். பிறகு உலகமே அவன் உறிஞ்சும் பீடிப் புகையில் தான்.

இந்த சின்னவேலைதான் நாலைந்து ஆண்டுகளாக அவனை வாழ்வித்து வந்தது.

(தொடரும்)

★

வேதனைப்படுகிறோம்!

'ரோமாபுரியின் கீர்த்தி எட்டாத இடமில்லை! வீர மண்டலமாக வாழ்ந்த ரோம், வீழ்ந்ததுஏன் தெரியுமா? சாம்ராஜ்யம் பெரிதான அளவுக்குஅதை ஆண்டோரின் மூளைபெரிதாகவில்லை! வீரர்களுக்குள்சண்டை ஒற்றுமைக் குறைவு—இதுவே உயர்ந்துவிளங்கிய அந்தஅரசை,தரைமட்டமாக்கிற்று!"—என்று கண்ணீரோடு, எழுதாத சரித ஆசிரியர்கள் இல்லை. அதனுடையபெருமைஅகில உலகுக்கும்பரவிற்று! ஆனால் அதனை ஆண்ட வீரர்களின் அறிவு, அதற்குத் தக்கபடி வளரவில்லை!! போட்டி—பொறாமை—சுயநலம்—சூது, இந்தக் கேடுகள் ரோமாபுரியைச் சூழ்ந்து கொண்டன. இதனால் பொது எதிரிகளை அடக்கும் வேலையே பெரிதாகப் போயிற்று! மாவீரன் பாம்பே, சீசரைக் கண்டு எகிப்து நாட்டுக்கு ஓடினான்—தப்பி வாழ. எகிப்து மண்ணில் எடுத்தடி வைத்த அவனை, வெட்டி வீழ்த்தினான்—ஒரு ரோமானிய வீரன். தலையை, சீசரின் காலடியில்வைத்து வஞ்சம் பெற முனைந்தான்! சீசர் மாவீரனாசி, ரோமாபுரியின் வீதிகளில் பவனி வந்தான்—பார்த்தோர் வியந்தனர்! பெருமிதமும் பூரிப்பும் ரோமாபுரியின் உள்ளத்தில் பொங்கிற்று. ஆனால், கடைசியில் புரூடஸ் எனும் அவனுடைய நண்பனும் சிலரும் செய்த சதியால், கொலையுண்டு மாண்டான்! அவ்வண்ணம் கொலை செய்த புரூடசைக் கொன்றான், அந்தோனி எனும், சீசரின் ஆருயிர் நண்பன்! அந்த அந்தோனியை வீழ்த்தி வெற்றி பெற்றான், அகஸ்டஸ்!—என்று, வெற்றியும் வீழ்ச்சியும் போட்டி போட்டுக்கொண்டு ஓடிவரும், ரோமாபுரியின் சரித்திரத்தில், விவேகமில்லாது இந்த வெறிப்போக்காலேயே, மத்யதரைக் கடலின் மணிமுடிபோல விளங்கிய அம் மாபெரும் சாம்ராஜ்யம் மண்ணோடு மண்ணாயிற்று! இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், இது. இந்த 'ரோமாபுரிப் படலம்' இன்றும் காட்சி அளிக்கக் காண்கிறோம், பலருடைய உள்ளங்களில். தாக்கவரும் மலைப்பாம்பை அடிக்கத் தடிதாங்கிச் செல்லும் மறவர் கூட்டம் தத்தமது கையிலிருக்கும் தடியினை நம்பி, வழியிலேயே ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்வதும், தகராறு செய்து கொள்வதும், மிகமிக வேதனைக்குரிய நிகழ்ச்சிகளாகும். புலிவேட்டையிலீடுபட்டோர் எலிவளைகளை ஆராய்ச்சிசெய்யும் விஷயத்தில் ஈடுபட்டு, அந்த ஆராய்ச்சி மாபெரும் சொந்த வேற்றுமையாக மாறி, 'தாக்குகத்திலையி! வா, சண்டைக்கு!' என்று கூவும் வம்பாக மாறி, அரசியல் களத்தை இரத்தச் சேறாக்கும் முறையினை, நாம் என்றும் கண்டித்தே வருகிறோம்.

பாடுபட்டும் பலன் காணாத பாட்டாளித் தோழனின் ஒரே எண்ணம் இன்பவாழ்வெனும் மாளிகையை எப்படி அடைவது என்பதுதான்! அதனை எட்டிப் பிடிக்கப் பாதை வகுப்போர், பலர் வரலாம்—அந்தப் பாதைகளில் பலவிதம் ஏற்படலாம்—ஆனால் எல்லாப் பாதைகளும் இன்பபுரிக்கிட்டுச் செல்வதாக இருந்தால், பாதை வகுப்பதில் கருத்து மாறுபட்டோர், அந்தப் பாதைகளையே பெரிதென எண்ணி, சண்டைபோட்டுக்கொள்வதும், சமர்க்கோலம் பூணுவதும், வேதனைக்குரிய செயல்களாகும்.

திராவிடத்தைப் பிடித்திருக்கும் மாபெரும் நோய்களை, நீக்கிடும் அருமையான பணிக்குத் தம்மை அர்ப்பணம் செய்திருப்போர், நாம். இந்தப் பணியில் யார் கைகொடுக்க வந்தாலும், மறுத்ததில்லை, இது வரையில்! யாராவது 'கைகொடு' என்று அழைத்தாலும், மறுத்ததில்லை! நம் கூடப்பிறந்த இந்தக் குணத்தின் காரணமாகத்தான் ஜமீன்—இனாம் ஒழிப்பு என்று செங்கொடியினர் அழைத்தாலும், ஜாதி ஒழிப்பு மாநாடு வா!' என்று கதர்க்கொடியினர் அழைத்தாலும், செங்கொடியின் அகல நீளம் எவ்வளவு—கதர்க்கொடியின் கனம் எப்படியிருக்கிறது — என்கிற 'எலி வேட்டை'யில் ஈடுபடாது, பொதுப் பிரச்னைகளுக்கு கைகொடுக்க முன் வந்திருக்கிறோம்.

இந்தக் காட்சி பொதுவாழ்வில் அரும்பவேண்டும் என்பதை ஆயிரமாயிரம் முறை, எடுத்துச் சொல்லியிருக்கிறோம். நமது கழகம் பிறந்ததே, கண்ணியமான குறிக்கோளுடன்! நாம் சிந்தை நொந்து கிடந்தபோது, நம்மை 'ரோமாபுரிப்பாதை'யில் கொண்டு போய் விடத்துடித்தோர்பலருண்டு. வகை இல்லையா! கால் இல்லையா! என்று தட்டிவிட, முன்வந்ததபாபர்கள், அமோகப் கோள் மூட்டி, இடையில்வழியும் இரத்தத்தைக் குடிக்கும் குள்ளநரிகள் பொதுவாழ்வில் அதிகம் என்பதை அறிவோம், நாம்! அதனாலேயே அவர்களின் யோசனைகளுக்கெல்லாம், தலைசாய்க்கவில்லை. ஆளுக்கு விழுது! என்றோம்.

இவ்வண்ணம் சொந்தக்கூடாரத்திலேற்பட்ட பிரச்னைகளின் போதுமட்டுமல்ல, மாற்றுக்கட்சி நண்பர்களுக்கும் நமக்குமிடையே, கருத்து வேற்றுமைகளும், உள்ளக் கொதிப்பும் உருவான சமயங்களிலும், பொறுமையையே பூஷணமாகக் கொண்டோம்

வானத்திலே பவனிவரும் நிலவைப் பிடிக்க அல்ல, நாமும் மற்ற கட்சிகளும் பாடுபடுவது! வையத்திலே உலவும் மனிதர்களை, வாழச் செய்வதற்காக!!

உலகில் சாவுக்குப்பின், மனிதன் சாதித்த காரியங்கள்தான் நிற்குமேயொழிய, வேறொன்றும் இல்லை! வாழ்க்கை நேரம், மண்ணில், ஒவ்வொரு மனிதனுக்கும் அதிகமில்லை. அந்தக் காலத்துக்குள் துயரமிக்க இந்தப் பூமியில் பிறந்து—அதுவும் பொதுவாழ்விலீடுபட்ட — நண்பர்கள், தம்முடைய தூய உள்ளத்தையும் வஞ்சகமில்லாத பொதுப் பணியையும் செய்து, வாழ்விழந்தவனை வாழவைக்கவும், துயரம் நிரம்பிய தேசத்தை இன்ப பூமியாக்கவும், தன்னுடைய காலத்தையும் கடமையையும் செலவழிப்பதை விட்டு, காட்டுப் பாதையில் செல்வதைக் காண, நல்லோர் கண்ணீர் சிந்தவே செய்வர்.

இவ்விதம் கண்ணீர் சிந்தும் கட்டங்கள், அடிக்கடி ஏற்படுகிறது, இந்தப் பூமியில்.

நம்முடைய நாட்டில் பாட்டாளி வர்க்கத்துக்குப் பாடுபடும் பாதையில், கட்சிகளுண்டு—பலவிதம்! அவ்வளவு கட்சிகளிருக்கிற காரணத்தால், அவர்களின் பணியாவும் வெற்றி தருவது நமது சமதர்மப் பாதைக்கு வலிவு தரும் என்கிற உள்ள உறுதியால் பலர் அடிக்கடி நமது கழகச் சார்பில் தொழிலாளர் சங்கங்கள் வேண்டுமென்று சொல்லும்போதெல்லாம் அந்த ஆசையைத் தூண்டாமலிருந்து வருகிறோம்—பங்கு போடும் பாதையில், பாட்டாளி உலகு அகப்படக் கூடாதே, எனும் ஆசையால்! அதற்காக நாட்டில் உலவும் நானாவிதத் தொழிற் சங்கங்களின் நடவடிக்கைகளை ஊக்குவித்தும் நம்மனோரைப் பங்கு கொள்ளச் செய்தும், ஆதரவு காட்டி வருகிறோம்!! இன்ப புரியை எட்டிப்பிடிக்க பாதைகள் பல போட்டு முயலும், கட்சிகளில், செல்லும்போது சீற்றமும் கோபமும் அதிகரித்து பாதையில் பிணங்களைப்போட்டு மூடுவது கூடாது என்பதால்—தொழிற் சங்கங்களுக்குள் மனோவேகமும் மாச்சரியமும் ஏற்படும்போதெல்லாம், கண்டித்தே வந்துள்ளோம்.

அவ்விதம் கண்டிக்கக் கூடிய காரியம்தான், தூத்துக்குடியில் நடைபெற்றிருப்பது.

மேதினத்தன்று, அங்கிருக்கும் எல்லா தொழிலாளர்களும் ஒன்று சேர்ந்து ஒரே அணியாக ஊர்வலம் செல்வதென்றுமுடிவுசெய்தனராம்! அதன்படி ஊர்வலத்தில் பொது முழக்கத்தைத் தவிர வேறெதுவும் கூடாதுஎன்றும்ஏற்பாடாம்! ஆனால் ஊர்வலம் செல்லத் துவங்கிய சிறிது நேரத்துக்கெல்லாம், ஒருசிலர் வேற்றுமைகளை வளர்த்து, அந்த ஊர்வலத்திலிருந்து தனியாகப் பிரிந்து, சென்றுஊர்வலம்நடத்தினராம்! அப்படிச் செய்தது, தேசிய இயக்கத்தால் வளர்க்கப்படும் சங்கத்தவர் அல்லவாம்!! செங்கொடியேந்தியவர்களாம்!!—சிந்தை நோகத்தானே செய்யும், சகோதரபாசம் கொண்டநமக்கு.

சிறுநிகழ்ச்சி—நாட்டின்கோடியில் ஆனால், அது புகட்டும், அரசியல் புத்திமதி, சாதாரணமானதல்ல

அந்தளவில் நில்லாது மனம் நோகக்கூடிய வகையில் அந்தவூரில் தடியும்கம்பும்கூடத் தாண்டவமாடிற்றாம்! மிகப் பெரிய. வேதனை இது

இத்தகைய வேதனையான நிகழ்ச்சிகளில் ஈடுபடுபவர்யாராயினும், தி. மு. கழகம், கண்டிக்கத் தயங்காது. நாட்டைப் பூஞ்சோலையாக்கும்பொதுப்பணியில் அரசியல் கண்ணியத்தையும், பிரச்னையில்வெற்றி காணவேண்டும் எனும் ஆர்வத்தையுமே நாம் எதிர்பார்க்கிறோமேயொழிய, அடி! உதை! குத்து! வழிகளையல்ல

இந்த வழிகளைத் தூண்டி விட்டு அதன் மூலம் பாட்டாளிகளின் குரலுக்கு இரட்டைத்தாழ்ப்பாள் போடும் எண்ணங்கொண்ட ஆட்சியில் நாம் இருக்கிறோம்! இதனையும், நிகழ்ச்சிகளை உருவாக்கியோர் மறந்துவிட்டனரென்றெண்ணும் போது மிகமிகவேதனைப்படுகிறோம்.

இன்று இந்த மண்ணில் ஏழையின் குரலுக்கு மகத்தானதோர் சக்தி ஏற்பட்டிருக்கிறது! அதனைக் கண்டு உலகமே மருள்கிறது. ஏரோட்டும் விவசாயியும், இயந்திரம் ஓட்டும் தொழிலாளியும், உழைப்பவனும், ஓயாது வறுமைத் தொல்லையில் அகப்பட்டு உழல்பவனும், தன்னுடைய கொடுமைகளைக் களைய விடுதலை முழக்கம் எழுப்புகிறான். அந்த முழக்கத்தை உருவாக்கும் முற்போக்குப் பணியிலீடுபட்டிருக்கும் கட்சிகளுக்கு முன்பைவிடப் பொறுப்பும், விவேகமும் அதிகம் தேவை இப்போது. அதனை மறந்து இதுபோன்ற சம்பவங்கள் நிகழ்வதும், அதன்மூலம் மாற்றாரின் கேலிக்கு ஆளாவதும், மனிதனைத் தாக்கச் செய்யப்படும் துரோகமாகும்.

இந்தப் பாதை, இன்பபுரிக்குவிட்டுச் செல்லாது! 'பாபெரும் சக்தி—மண்ணானது' எனும் பழியையே அள்ளித்தரும்! அத்தகைய 'ரோமாபுரிகளைச் சிருஷ்டிக்காமலிருக்குமாறு சம்மந்தப்பட்டவர்களை, வேண்டிக் கொள்கிறோம். வேண்டாம், வேதனை! பொறுப்பை உணருக!!

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
35, Tirukkachinambi St., Kancheepuram.